# வலம்புரி
VALAMPURI

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு .2034 | தை11 சனிக்கிழமை (25.01.2003) | தொலைபேசி~ 2223378 | ஒலி 37



ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT


# அரசைக் கவிழ்க்க எதிர்க்கட்சிகள் சதி

## அமைச்சர் ஹக்கீம் ஆரூடம் எதிர்த்துப் போராடவும் தயாராம்

(நமது நிருபர்)

**பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியின் அரசாங்கத்தைப் பலவீனப்படுத்தி அதிலிருந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசையும்,இலங்கைத் தொழிலாளர் காங்கிரசையும் பிரித்தெடுத்து மாற்று அரசொன்றை அமைப்பதற்கு பொது ஜன ஐக்கிய முன்னணி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் இணைந்து பகீரதப் பிரயத்தனம் செய்துவருவதாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய தேசிய முன்னணி அரசை பலவீனப்படுத்துவதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மீதும் அதன் தலைவராகிய என் மீதும் சேறு பூசி அரசியல் லாபம் தேட முயலும் பொது ஜன ஐக்கிய முன்னணி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் சதி முயற்சிகள் மேற்கொண்டுள்ளன.

பாரிய அரசியல் மாற்றம் ஒன்றை எதிர்பார்த்து பொது ஜன ஐக்கிய முன்னணி அதன் தோழமைக் கட்சிகளுடன் இணைந்து செயற்பட முயற்சி செய்து வருவதையடுத்து அதனை தேசியமட்டத்தில் இருந்து முறியடிப்பதற்குரிய நடவடிக்கைகளை முஸ்லிம்காங்கிரஸ் எடுத்து வருகின்றது.

இதன் முதற்கட்டமாகநாட்டில் உள்ள சகல பிரதேச சபைகளும்

(10ம் பக்கம் பார்க்க)

## அதாவுல அணி மீதான தடை மேலும் ஒரு வாரத்துக்கு நீடிப்பு

### கொழும்பு மாவட்ட நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மாற்று அணியான அதாவுல அணியினருக்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த தடையுத்தரவு மேலும் ஒருவாரத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது.

ஏ.எல்.அதாவுல,எஸ்.சுபைதீன், டாக்டர் உதுமாலெப்பை ஆகியோர் உட்ட 19 பிரதிவாதிகள் கட்சியின் அதி உயர் பீட உறுப்பினர்களாகச் செயற்படுவதை இடை நிறுத்தி வைக்குமாறு அமைச்சர் ரவூப் ஹக்கீம் மனு தாக்கல் செய்திருந்தார்.

(10ம்பக்கம் பார்க்க)

## ஊர்காவற்துறை-கரம்பனில் அழுகிய நிலையில் சடலம்

(ஊர்காவற்துறை)

ஊர்காவற்துறை கரம்பன் கிழக்கு பத்தன் பிட்டி ஒழுங்கையில் உள்ள வெற்றுக் காணி ஒன்றில் அழுகிய நிலையில் சடலம் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் (24.01.2003) அப்பகுதிக்கு சீவல் தொழிலுக்குச் சென்றவர்களால் இச் சடலம் அவதானிக்கப்பட்டதைத் தொடர்ந்து உடனடியாக ஊர்காவற்துறைப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து ஸ்தலத்திற்கு விரைந்த பொலிஸார் சடலம் தொடர்பான விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

இதேவேளை,சடலம் காணப்பட்ட

(10ம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவர்



(கொழும்பு)

இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவராக இருந்த நோர்வேயின் முன்னாள் இராணுவ அதுகாரியானபியுறு ஹெவ்டே விலகிச் செல்வதையடுத்து அவரின் இடத்திற்கு ரைக்கி டெலிசன நியமிககப்பட்டுள்ளார். (ந)

## இந்திய முன்னாள் இராணுவ தளபதி நம்பியார் இலங்கை வருகிறார் !

(கொழும்பு)

அதியுயர் பாதுகாப்பு வல்யம் தொடர்பான அறிக்கை சமர்ப்பிப்பதற்காக இந்திய முன்னாள் இராணுவத் தளபதி லெப்ரினன் ஜெனரல் சதீஸ் நம்பியார் இலங்கை வரவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இலங்கை வரும் தளபதி நம்பியார் யாழ்.குடாநாட்டுக்கு விஜயம் செய்து உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களை நேரில் பார்வையிடுவதுடன்,யாழ் படை உயரதிகாரிகளுடனும் பேச்சுநடத்துவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் தங்கியிருக்கும் நாட்களில் அவர் இலங்கைப் படை உயரதிகாரிகளுடன் பாதுகாப்புத் துறை விஸ்தரிப்புக் குறித்து பேச்சு நடத்துவார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (இ)

## சிங்கள இளைஞர் இருவர் கைது!

(வவுனியா)

வன்னிப் பகுதியில் இருந்து உயல்ங்குளம் ஊடாக ரி.56ரக துப்பாக்கி ரவைகளுடன் வந்த இரண்டு சிங்கள இளைஞர்கள் இராணுவத்தினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டு மன்னார் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இந்த இரண்டு சிங்கள இளைஞர்களும் மாத்தறையைச் சேர்ந்தவர்கள். இவர்கள்மன்னார் நீதிவான் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டபோது அடுத்த மாதம் 3ம் திகதி வரை விளக்கமறியல்லில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (வ)

## பாராளுமன்றக் குழு இன்று கொழும்பு திரும்புகிறது

(ஈபேர்ளின்)

மேற்கு நாடுகளில் நடைமுறையில் உள்ள சமஷ்டி அரசியல் அமைப்புத் தொடர்பாக ஆராய்வதற்கு வெளிநாடுகளுக்கு விஜயம் செய்திருந்த அரச மற்றும் எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு இன்று கொழும்பு திரும்பவுள்ளது.

அமைச்சர் கலாநிதி ஜயலத் ஜயவர்த்தனா தலைமையில சென்ற இக் குழுவினர் கொழும்பு திரும்பியதும் உடனடியாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவைச் சந்தித்து சமஷ்டி அரசியல் அமைப்புக் குறித்த முழு விபரங்களுடன் அறிக்கை ஒன்றைச

(10ம் பக்கம் பார்க்க)

## தேசிய கீதத்தை மாற்றுவதில் அரசாங்கம் அவசரப்பட கூடாது

### ஜனாதிபதி பிரதமருக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

தேசிய கீதத்தை மாற்றுவது குறித்து அவசர முடிவுகள் எதனையும் அரசாங்கம் மேற்கொள்ளக் கூடாதென்று, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை எச்சரித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கையில், தேசிய கீதத்தில் மாற்றங்கள் செய்வது குறித்து ஏதாவது யோசனைகள் அரசாங்கத்திற்கு உள்ளதாயின் அதனைப் பிரதமர் தெரியப்படுத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;தேசிய கீதத்தில் மாற்றம் எதனையும் செய்வதாயின் மூன்று நிக்காயாக்களையும் சேர்ந்த மகா

(10ம் பக்கம் பார்க்க)

## ஐந்தாம் சுற்று பேச்சுக்கள் ஜேர்மனியில் நடை பெறும்!

### நோர்வே வெளிவிவகார அமைச்சு அறிவிப்பு

(லண்டன்)

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான ஐந்தாம் சுற்றுப் பேச்சுவார்த்தை ஜேர்மனியின் தலைநகர் பேளினில் நடை பெறுமென்று நோர்வே வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

அடுத்த மாதம் 7ம்,8ம் திகதிகளில் இப் பேச்சுவார்த்தை பேளினில் உள்ள நோர்வேத் தூதரகத்தில் நடைபெறுமென்றும் அதற்குரிய ஏற்பாடுகள் செயயப்பட்டுள்ளதாகவும், நோர்வே வெளிவிவகார அமைச்சுவெளியிட்ட செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(10ம் பக்கம் பார்க்க)

## ஈழ அகதிகளை திருப்பி அனுப்ப ஐரோப்பிய நாடுகள் முஸ்தீபு

(நமது நிருபர்)

இலங்கைத் தமிழ் அகதிகளை படிப்படியாகத் திருப்பி அனுப்புவதற்கு இந்தியா நடவடிக்கை எடுத்து வருவதை அடுத்து ஐரோப்பிய நாடுகளும் தத்தம் நாடுகளில் தஞ்சம் அடைந்துள்ள இலங்கைத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவதற்கு நடவடிக்கைகளை ஆரம்பித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் தற்போது சமாதானச் சூழ்நிலை ஏற்படுவதையடுத்து தமிழகத்தில உள்ள தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவதற்கான பேச்சுவார்த்தையில் இலங்கை,இந்திய அதிகாரிகள் தற்போது ஈடுபட்டுள்ளனர்.

(10ம் பக்கம் பார்க்க)


ஹற்றன் நஷனல்
அடகு வைக்கும் வசதி
வாரத்தில் ஆறு நாட்கள் சனிக்கிழமை உட்பட

ஒரு பவுணுக்கு ரூ. 6325/- அடகுப்பணம்!
மாதாந்த வட்டி1.8% மட்டுமே!
மேலதிக விபரங்களுக்கு HNB யாழ்ப்பாணக் கிளையை நாடுங்கள்
ஹற்றன் நஷனல் வங்கி
உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி
யாழ்ப்பாணக் கிளை
இல. 212, 214, ஆஸ்பத்திரி வீதி,
தொலை பேசி: 021-2222787,021-2223463
தொலை நகல்: 021-2223194
[C/5501]

# படைபலத்தைக் குறைக்கும் நடவடிக்கையில் அரசு ஈடுபடாது

## படையினர் மத்தியில் அமைச்சர் பீரிஸ் உரை

(கொழும்பு)

**ஐக்கிய தேசிய முன்னணி அரசின் பன்முகப்படுத்தப்பட்ட இரண்டாவது வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்புக்கென ஒதுக்கப்பட்ட நிதியில் எவ்வித குறைப்பும் இடம்பெற மாட்டாது.**

வர்த்தக அபிவிருத்தி கைத் தொழில் கொள்கைவகுப்பு, முத லீட்டு ஊக்குவிப்பு மற்றும் அர சியல் விவகார அமைச்சர் பேரா சிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித் துள்ளார்.

மின்னேரியாவிலுள்ள 23ஆவது படைப்பிரிவு இராணுவ முகாமில் அரசாங்கத்தின் தற்போதைய சமா தான. நடவடிக்கைகள், நிலவும் பிரச்சினைகள் தொடர்பாக முப்ப டைகள் மற்றும் பொலிஸ் அதிகாரி களுக்கு தெளிவுபடுத்தும் கூட்டத் தில் பேசும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சர் அங்கு தொடர்ந்தும் பேசுகையில்,

இராணுவத்தின் ஆளணிப் பலத்தையும், அதன் சக்தியையும் குறைப்பதற்கு அரசாங்கம் எதுவித நடவடிக்கையையும் மேற்கொள்ளாது.

தமிழீழ விடுதலைப்புலிகளும். அரசாங்கமும் அரசியல் தீர்வு சம்பந் தமான எந்தவொரு ஒப்பந்தத் திலும் கைச்சாத்திட்டு நிரந்தர சமாதானத் தீர்வை எட்டுமுன்னர் புலிகள் தமது ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டும் என அரசு கேட்டுள்ளது.

சமாதான முயற்சிகள் கார ணமாக தற்போது நாட்டில் சுமுக மான நிலை ஏற்பட்டுள்ளதுடன், வெளிநாட்டு நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்களின் உதவிகள் பெரு மளவில் கிடைக்க ஆரம்பித்துள்ளன.

மேலும், இப்பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லப்படுமானால் வெளிநாடு களின் நிதியுதவிகள் இன்னும் அதிகரிக் கும் என்ற நம்பிக்கை உள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளுக் கும் அரசாங்கத்துக்கும் இடை யிலான தற்போதைய பேச்சுக் களின் போது அதிஉயர் பாதுகாப்பு வலயம் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பாகவே ஆராயப்பட்டு வருகின்றது.

இதற்கென குழுக்கள் அமைக் கப்பட்டு அப்பிரதேசங்களில் மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக ஆராயப்பட்டு வருகின்றது எனவும் தெரிவித்துள்ளார். (உ-8)



## உயர் பாதுகாப்பு வலயத்திற்கு வெளியே

# முகாம் கணக்கெடுப்பில் புலிகள் பங்குபற்றவில்லை

(கொழும்பு)

யாழ். குடாநாட்டின் உயர் பாது காப்பு வலயத்துக்கு வெளியே உள்ள பிரதேசங்களில் படையினர் நிலை கொண்டுள்ள வீடுகள் மற் றும் பொதுக்கட்டடங்கள் தொடர் பாக 22.01.2003 புதன்கிழமை மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பு முற்றுப் பெறவில்லை என இலங் கைப் போர் நிறுத்தக் கண்காணிப் புக் குழுவின் பிரதித் தலைவர் ஹொக்லன்ட் தெரிவித்துள்ளார்.

இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும், பாதுகாப்பு படையினரும் இணைந்து இந்தக் கணக்கெடுப்பை மேற்கொண்டனர்.

இக்கணக்கெடுப்பில் 6 குழுவி னர் ஈடுபடுத்தப்பட இருந்த போதிலும், 22.01.2003 இல்இரு குழுக்கள் மாத் திரமே ஈடுபட்டன.

யாழ். மாவட்டச் செயலாளரின் பிரதிநிதிகள் இதில் கலந்து கொள் ளாததன் காரணமாகவே இந் நெருக்கடி ஏற்பட்டதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் தரப்பு உறுப்பினர்கள் இந்தக் கணக் கெடுப்பில் கலந்து கொள்வதென முடிவெடுக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களும் கலந்து கொள்ள வில்லை.

இக்கணக்கெடுப்பைத் தொடர்ந்து நடத்துவது குறித்து நேற்று முன் தினம் விசேட பேச்சுவார்த்தை ஒன்று நடைபெற்றது. (உ-8)

## இளைஞர் படைத் தலைவர்

# ஆட்சேர்ப்பு விண்ணப்பத் திகதியை நீடிக்குக!

(யாழ்ப்பாணம்)

இளைஞர் படைத் தலைவர் பதவிக்கான ஆட்சேர்ப்பு முடிவுத் திகதியை மேலும் நீடிக்குமாறு இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் கொள்கை அபிவிருத்தி செயற்படுத்துகை அமைச்சின் செயலரைக் கோரியுள்ளார்.

இளைஞர் படைத் தலைவர் ஆட்சேர்ப்பு முடிவுத்திகதி கடந்த 21 ஆம் திகதியுடன் முடிவடைந்த போதிலும் வடபகுதியைச் சேர்ந்தோர் நன்மையடையும் விதத்தில் விண்ணப்ப முடிவுத் திகதியை நீடித்து உதவுமாறு அமைச்சர் மேலும் கேட்டுள்ளார்.

இதேவேளை, மேற்படி பதவிக்கான விண்ணப்பப் படிவங்கள் யாழ். மாவட்டத்துக்கு வேண்டிய அளவில் அனுப்பி வைக் கப்படாததால் பலர் விண்ணப்பிக்க முடியாமல் போனமை குறிப்பிடத் தக்கது. (உ)

# யாழ்.முஸ்லிம்களை மீளக் குடியமர்த்துக!

## அமைச்சர் ஹக்கீம் அரச அதிபரிடம் கோரிக்கை

(கொழும்பு)

யாழ். குடாநாட்டில் இருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களை அவர்களினது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்துவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் யாழ். அரச அதிபர் செ.பத்மநாத னைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

யாழ். குடாநாட்டில் மீளக் குடியர்த்துவது தொடர்பான கூட்டம் ஒன்று கொழும்பில் நடைபெற்ற போது இந்தக் வேண்டுகோளை அமைச்சர் விடுத்திருந்தார்.

அந்த வேண்டுகோளில் யாழ்ப் பாண மாவட்டத்தில் மீளக் குடியம ரவுள்ள முஸ்லிம்களின் அடிப்படை வசதிகள், தேவைகள் என்பவற்றை இனங்கண்டு அவர்கள் பரம்பரை யாக வசித்து வந்த பகுதிகளில் மீளக்குடியமர்த்துவதற்கும் நடவ டிக்கை எடுக்குமாறு கேட்டுள்ளார். (வ)

# வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது

(கொழும்பு)

பன்வெல தோட்டத் தொழிலாளர் களால் கடந்த இரு மாதங்களாக மேற்கொள்ளப்பட்டு வந்த பொது வேலை நிறுத்தம் கைவிடப்பட்டுள்ளது.

தொழில் ஆணையாளர் அலுவ லகத்தில் நேற்று முன்தினம் நடை பெற்ற பேச்சுவார்த்தைகளில் காணப் பட்ட இணக்கப்பாடுகளை அடுத்தே இவ் வேலை நிறுத்தம் கைவிடப் பட்டுள்ளது.

இத்தோட்டத்தை தனியாரிடம் கையளிப்பதென அரசு மேற்கொண் டிருந்த தீர்மானத்தை எதிர்த்தே தோட் டத் தொழிலாளர் போராட்டம் நடத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

ஏழாலை முடிமன்னர் ஆலயத் தின் வருடாந்த அலங்கார உற்ச வம் எதிர்வரும் 27 ஆம் திகதி திங்கட கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறவுள்ளது. (உ)

## ஜனாதிபதி கொலை முயற்சி

# விசாரணை அறிக்கை சட்டமா அதிபரிடம்

(கொழும்பு)

லக்பிம பத்திரிகை நிறுவனத் தைச் சேர்ந்த 15 பேரினதும் விசாரணை அறிக்கைகளை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சட்டமா அதிபர் கே.சி.கமலசபேசனுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

கடந்த ஓரிரு மாதங்களுக்கு முன்னர், ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்கவை கொலை செய்ய பொதுஜன ஐக்கிய முன்னணியின் சில உறுப் பினர்கள் திட்டம் தீட்டி இருக்கிறார் கள் என மேற்படி பத்திரிகையில் செய்தி பிரசுரிக்கப்பட்டிருந்தது.

இச்செய்தி தொடர்பாக எதிர்க் கட்சித் தலைவர் குறிப்பிட்ட பத்தி ரிகை மீது நடவடிக்கை எடுக்கு மாறு குற்றப் புலனாய்வுப் பிரிவின ரிடம் முறைப்பாடு செய்திருந்தார்.

இதற்கமைய பத்திரிகையின் முகாமையாளர் உட்பட 15 ஊழி யர்கள் குற்றப் புலனாய்வுப் பிரிவி னரால் விசாரணைக்கு உட்படுத் தப்பட்டனர்.

இவ்விசாரணைகள் தொடர்பான அறிக்கையே சட்டமா அதிபருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (உ-8)

# நீண்ட நேர விமானப் பயணங்களை தவிர்க்க பாலாவுக்கு ஆலோசனை

(கொழும்பு)



நீண்ட நேர விமானப் பயணங் களைத் தவிர்த்துக் கொள்ளுமாறு தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசி யல் ஆலோசகரும் தத்துவாசிரிய ருமான கலாநிதி அன்ரன் பால சிங்கத்துக்கு அவரது குடும்ப வைத்தியர்களினால் அறிவுறுத்தப் பட்டுள்ளது.

ஏற்கனவே நீரிழிவு மற்றும் சிறுநீரகப் பாதிப்பு போன்ற நோய் களுக்கு உள்ளாகியிருக்கும் இவ ரது உடல் நிலை தற்போது பாதிக் கப்பட்டுள்ளது.

இதன் காரணமாகவே குடும்ப வைத்தியர், அன்ரன் பாலசிங்கத்தை நீண்ட நேர பிரயாணங்களைத் தவிர்க்க வேண்டும் என அறிவுறுத் தியுள்ளார்.

இதற்கிடையில், அரசாங்கத் துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தாய்லாந்தில் நடைபெற விருந்த 5 ஆம் கட்டப் பேச்சுவார்த் தையை அவரது உடல் நிலை காரணமாக ஐரோப்பிய நாடு ஒன் றுக்கு மாற்றலாம் என எதிர்பார்க் கப்படுகிறது.

ஜேர்மன், நெதர்லாந்து, டென்மார்க் போன்ற நாடுகள் அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தை களை தமது நாடுகளில் நடத்த முடியும் என அரசுக்கு அறிவித் துள்ளமையும் இங்கு குறிப்பிடத் தக்கது. (உ-8)

## இந்திய இடதுசாரிக்கட்சி ஜே.வி.பி. கூட்டு

(கொழும்பு)

இந்திய இடது சாரிக் கட்சிகளில் ஒன்றான ஜோதி பாசுவின் மாக்சிஸ்ட் கட்சி, ஜே.வி.பி. யுடன் இணைந்து செயற்படத் தீர்மானித்துள்ளது. (உ)

## பொதுக்கூட்டம்

(சுதுமலை)

பொதுச் சுகாதாரப் பரிசோதகர் யாழ்.கிளையின் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணிக்கு யாழ். நாவலர் வீதியில் உள்ள ஆனைப்பந்தி அமெரிக்க மிஷன் பாடசாலையில் நடைபெற உள்ளது. (உ-252)

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் வடமாகாணக் கிளைகளின் வரு டாந்தப் பொதுக் கூட்டமும் புதிய செயற்குழுத் தெரிவும் நாளை மு.ப 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்தவகையில், தென்மராட்சிக் கிளைகளுக்கான கூட்டம் சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் வலிகாமம் கிளைக்கான கூட்டம் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி யிலும் இடம்பெறவுள்ளது.

இதேவேளை, வடமராட்சிக் கிளைக் கான கூட்டம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 9 ஆம் திகதி நெல்லியடி மத்திய கல்லூரியிலும், யாழ்ப் பாணக் கிளை மற்றும் தீவக கிளைக ளுக்கான கூட்டம் பெப்ரவரி மாதம் 12 ஆம் திகதி யாழ் மத்திய கல்லூரி யிலும் இடம்பெறவுள்ளது. (உ)

## கொழும்புத்துறையில்

# இளைப்பாற்று மண்டபம் அமைக்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறையில் இளைப் பாற்று மண்டபம் ஒன்றினை அமைத துத் தருமாறு அப்பகுதிக் கடற்றொழி லாளர் சங்கம் யாழ். அரசாங்க அதிபர் செ.பத்மநாதனிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

நேற்று முன்தினம் யாழ்.செயல கத்தில் வைத்து அரச அதிபரைச் சந்தித்த கொழும்புத்துறைக் கடற் றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள், கடற்கரையில் மட்டைக் கிடங்கு களை அமைத்து தும்புக் கைத் தொழிலை மேற்கொள்ள வழி வகை செய்து தருமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவர்களின் கோரிக்கை தொடர் பாக சாதகமான நடவடிக்கை எடுப் பதாக அரச அதிபர் உறுதியளித் துள்ளார். (உ)

# சமாதான முயற்சிகளை எதிர்த்த சக்திகள் இன்று ஓய்ந்துவிட்டன!

## தனது தளரா முயற்சியே இதற்கு காரணம் என்கிறார் பிரதமர்

(கொழும்பு)

**அண்மைக்காலமாக சமாதான நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத்தெரிவித்து வந்த எதிர்க்கட்சிகள் தமது கூச்சல், குழப்பங்களை நிறுத்தி, அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவை இலக்கு வைத்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்த ஆரம்பித்துவிட்டன.**



இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திற்கு முன்னர் கருத்து வெளியிடும்போது தெரிவித்தார்.

பிரதமர் தொடர்ந்தும் இங்கு கருத்து வெளியிடுகையில், தற்போது சமாதான முயற்சிகள் வெற்றிகரமாக முன்னெடுக கப்பட்டு வருகின்றனீ.

சர்வதேச சமூகத்தினரும் நாட்டின் பெரும்பாலான மக்களும் இதற்கு பூரண ஆதரவு வழங்கிவருகின்றனர்.

சமாதான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து நாட்டின் பொருளாதாரம் முன்னேற்றம் கண்டுள்ளது என்பதை மத்திய வங்கி அறிக்கைகள் எடுத்துக்காட்டுகின்றன.

எதிர்க்கட்சிகளும் இனவாத சக்திகளும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களையோ,பேரணிகளையோ நடத்திவந்தாலும் சமாதான முயற்சிகள் இடை நிறுத்தப்படமாட்டா.

இனப்பிரச்சினைக்கு நிரந்தரதீர்வுகாணும் பொருட்டே மக்கள் எனக்கு வாக்களித்துள்ளனர்.

இதனை நிறைவேற்றுவது எனது கடமையாகும். மக்களின் நம்பிக்கைக்கு மாறான வழிகளில் நான் நடந்து கொள்ளமாட்டேன் எனவும் தெரிவித்துள்ளார். (உ-8)

### திருவிழாத் திருப்பலி

(யாழ்ப்பாணம்)

ஓட்டுமடம் புனித செபஸ்தியார் ஆலயத் திருவிழா திருப்பலியும் திருச்சொரூப பவனியும் நாளை இடம்பெறவுள்ளது. (உ)



## துரித மீள்குடியமர்வுக் குழுவில்
## பெண்களின் பங்கு புறக்கணிப்பு
## பெண்ணிய அமைப்புகள் போர்க்கொடி

(தென்மராட்சி)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் துரித மீள்குடியமர்வுப்பணிக்கென சிரான் அமைப்பினால் நியமிக்கப்பட்ட 21 பேர் கொண்ட குழுவில் குடாநாட்டுப் பெண்களுக்கு பிரதிநிதித்துவம் அளிக்கப்படாமை குறித்து யாழ்பாணத்திலுள்ள பெண்ணிய அமைப்புக்கள் தமது ஆட்சேபனையை வெளிப்படுத்தியுள்ளன.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாண மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் இடம்பெற்ற மகளிர் கலந்துரையாடலில் பங்கு பற்றிய மகளிர்களே இவ் ஆட்சேபனையை வெளிப்படுத்தினர்.

இதுபற்றி மேலும் அறிப்படுவதாவது, யாழ்ப்பாணக் குடாநாட்டில் பெண்களின் சனத்தொகை 53 சதவீதமாக இருக்கின்ற போதிலும், சிரான் அமைப்பினால் யாழ். அரச செயலகத்தில் நியமிக்கப்பட்ட துரித மீள்குடியமர்வுக்குழு நியமனத்தில் குடாநாட்டுப் பெண்கள் புறக்கணிக்கபபட்டமை துரதிர்ஷ்டமானதாகவே கருதப்படுகின்றது எனக் குறிப்பிட்டனர்.

இணையத்தின் உபதலைவர் வீ. ஸ்ரீசக்திவேல் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் தென்ஆபிரிக்காவை சேர்ந்த நான்கு பெண்களும், தென் பகுதியைச் சேர்ந்த நான்கு பெண்களும் சமுகமளித்திருந்தனர்.

இக்கலந்துரையாடலில், தற்போது நடைமுறையில் இருந்து வருகின்ற சமாதான வழிமுறைகளில் பெண்களின் பங்களிப்புகள், பெண்கள் அடையும் பயன்கள் மற்றும் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் பின்னடைவுகள் பற்றி விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இக்குழுவினர் யாழ்ப்பாணக் குடாநாட்டில் பல பகுதிகளுக்கும் நேரில் விஜயம் செய்து பெண்கள் பற்றிய பிரச்சினைகள் மற்றும் தேவைகள் பற்றி ஆராய்ந்து வருகின்றனர். (உ-77)

காணாமல்போனோர் தொடர்பான விசாரணைகளை நடத்துவதற்கென யாழ். வந்துள்ள தேவநேசன் நேசையா தலைமையிலான குழு

## தோட்டத் தொழிலாளர் சங்க பேராளர் மாநாடு இன்று


### பிரதமர் தலைமையில் இடம்பெறும்

(கொழும்பு)

இலங்கைத் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் 23 வது பேராளர் மாநாடு இன்று ஸ்ரீகொத்தாவிலில் இன்று மு.ப. 10.00 மணிக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலை மையில் நடைபெறவுள்ளது.

இப்பேராளர் மாநாட்டில் பதுளை, கண்டி, கேகாலை, களுத்துறை, இரத்தினபுரி, பலாங்கொடை உட்பட பல இடங்களில் இருந்தும் ஆயிரத்து 800 பேராளர்களும், அமைச்சர்களான கருஜெயசூரிய, காமினி லொக்குகே, மகிந்த சமரசிங்க, லஷ்மன் கிரியல்ல ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இம்மாநாட்டின் போது, தோட்டத் தொழிலாளர்களின் வீட்டு வசதி, தோட்டமாணவர்களின் கல்வி அபிவிருத்தி, தோட்ட இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு, சம்பள அதிகரிப்பு என்பன தொடர்பாக ஆராயப்பட்வுள்ளது. (உ-8)




## ஜேர்மன் சமஷ்டி குறித்து தூதுக்குழு ஆராய்ந்தது

(ரோம்)

சமஷ்டி அமைப்பு முறை குறித்து அறிந்துகொள்வதற்காக பெல்ஜியம், இத்தாலி ஆகிய் நாடுகளுக்குச் சென்ற இலங்கைப் பாராளுமன்றக் குழுவினர் "ஒஸ்ரிய இன்ஸ்குறுப்பல்கலைக் கழகத்துக்கு" விஜயம் செய்த ஜேர்மன் மியூனிக்ஸ் பிரதேசத்தின் சமஷ்டி முறை குறித்து பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் மென்பினட் கென்ர ருடன் கலந்துரையாடியுள்ளதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரிசாத்பதியுதீன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், 4.6 வீதம் லத்தீன் மொழிபேசும் மக்கள் வாழும் இத்தாலிகளில் அவ்இனத்தைச் சேர்ந்த 'ஒருவர் பிரதமர் பதவி வகிக்கிறார் என்றால், இலங்கையின் சிறுபான்மை இனத்தவரின் ஒருவர் ஏன்பிரதமராகவரமுடியாது என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

சமஷ்டி அமைப்பு முறை பற்றி ஆராய்வதற்கென சென்ற இலங்கைப் பாராளுமன்ற அரச, எதிரணி உறுப்பினர்கள் இன்று சனிகிழமை காலை இலங்கை திரும்ப உள்ளனர் என்று அமைச்சர் கலாநிதி ஜயலத்ஜெயவர்த்தனா தெரிவித்துள்ளார் (வ)



### சிறுவர்திறன் விருத்திபோட்டி

(யாழ்ப்பாணம்)

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் நடத்தப்பட்டுவரும் சிறுவர்களுக்கான திறன்விருத்தி ப் போட்டி இன்று சனிக்கிழமை காலை வட இந்துமகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.


கரவெட்டி, பருத்தித்துறை, மருதங்கேணிப் பிரதேசத் திற்கான வலய மட்ட சிறுவர்கள் இபபோட்டிகளில் கலந்துகொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (வ)

### மாதாந்தப் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். சமூக அபிவிருத்தி மன்றத்தின் மாதாந்தப் பொதுக் கூட்டம் இன்று சனிக்கிழமை ஸ்ரான்லி வீதியில் உள்ள அதன் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

இன்றைய தினம் பசன்புறுட் நாற்று வழங்கப்படவுள்ளதுடன், அப்பயிர்ச் செய்கை பற்றிய விளக்கமும் அளிக்கப்படவுள்ளதால் மன்ற உறுப்பினர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு தலைவர் ந. கந்தையா கேட்டுள்ளார். (உ)



யாழ். மாவட்டத்தில் நடத்தப்படவுள்ள தேசிய விளையாட்டு விழாதொடர்பாக, நேற்று யாழ். செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் பங்குகொண்டவர்களையும் விளையாட்டுத்துறை அமைச்சின் பணிப்பாளர்நாயகம் ஏ.ஏ.மில்டன அமரசிங்க, அமைச்சின் செயலாளர் என்.ஜி.புஞ்கேவா ஆகியோர் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். படங்கள் : புவன்

# ஈராக் பிரச்சினைக்கு ஒரு விரைவான தீர்வு வேண்டும்

## ஜெர்மன் - பிரான்ஸ் அதிபர்கள் கூட்டாக வலியுறுத்து

(பரிஸ்)

ஈராக் பிரச்சினைக்கு விரைவில் அமைதித்தீர்வு காண வேண்டும் என்று பிரான்ஸ் அதிபர் ஜேக்ஸ் ஷிராக்கும், ஜெர்மனி அதிபர் ஜெரார்ட் ஸ்குரோடரும் வலியுறுத்தியுள்ளனர். ஈராக்குடன் போருக்கு அமெரிக்கா தயாராகி வரும் நிலையில் இது மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது.

போரைத் தவிர்க்க முடியும் என்று சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பிரான்ஸ், ஜெர்மனி கூட்டு நாடாளுமன்றக் கூட்டத்தில் புதன் கிழமை பேசுகையில் பிரான்ஸ் அதிபர் ஷிராக் கூறினார்

போர் என்பது மிகவும் மோசமான தீர்வாகும். எனவே அதனை எப்பாடுபட்டாவது தடுக்கவேண்டும் என்றார் அவர்.

ஈராக் மீது போர் தொடுப்பது என்றால், அது குறித்து முடிவு ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சிலில்தான் எடுக்கப்பட வேண்டும் என்பதில் பிரான்ஸ"ம் ஜெர்மனியும் உறுதியாக இருப்பதாகவும் பிரான்ஸ் அதிபர் தெரிவித்தார்.

இதை ஜெர்மனி பிரதமர் ஜெரார்ட் ஸ்குரோடரும் ஆமோதித்தார்.

ஐ.நா பாதுகாப்புக் கவுன்சிலின் ஐந்துநிரந்தர உறுப்பினர்களில் பிரான்ஸ"ம் ஒன்று என்பது குறிப்பிடத் தக்கது.

### ஈராக்குக்கு மேலும் அவகாசம் தரவேண்டும்

ஈராக்குடன் போர் என்று உடனடியாக முடிவெடுத்துவிடக் கூடாது. அதற்கு மேலும் அவகாசம் கொடுத்துப் பார்க்க வேண்டும என்று பிரான்ஸ"ம், ஜெர்மனியும் கருத்துக்கெண்டுள்ளன என்று ஐ.நா. உயர்நிலை வட்டாரங்கள் கடந்த வியாழக்கிமை தெரிவித்தன.

பேரழிவு ஆயுதங்கள் உள்ளதா என்று ஈராக்கில் சோதனை மேற்கொண்டுள்ள ஐ.நா. ஆய்வாளர்கள் 27ஆம் திகதி முதலாவது முக்கிய அறிக்கையை வழங்கவுள்ளனர். இது தொடர்பாக ஐ.நா பாதுகாப்புக் கவுன்சில் 29ஆம் திகதி விவாதிக்கும்.

ஐ.நா.ஆய்வாளர்களிடமிருந்து பெப்ரவரி நடுப்பகுதியில் மற்றொரு

WORLD NEWS உலக தரிசனம்

அறிக்கை பெறப்படவேண்டும் என்று பிரான்ஸ"ம், ஜெர்மனியும் வலியுறுத்தும் என்று தெரிகிறது. இதன் மூலம்ஈராக் மீதான இராணுவ நடவடிக்கை தாமதப்படவும், அமைதித் தீர்வுக்கு வழிகாணவும் அவை விரும்புகின்றன.

ஐ.நா ஆய்வாளர்கள் அறிக்கை தரும் 27ஆம் திகதி ஈராக் மீதான போர் குறித்து முடிவெடுக்க உரிய நாள் என்று ஏற்கனவே அமெரிக்கா அறிவித்துள்ளது. படைகளை வளைகுடாவில் குவிப்பதுடன் தனது நேச நாடுகளைத் தனக்கு ஆதரவாகவும் திரட்டி வருகிறது அமெரிக்கா.

### 50மனிதக் கேடயங்கள் நாளை ஈராக் பயணம்

போர் எதிர்ப்பாளர்கள் 50பேர் பஸ் மூலம் லண்டனிலிருந்து பக்தாத்துக்குச் இன்று புறப்படத் திட்டமிட்டுள்ளனர்.

எப்போதும் போர் மூண்டுவிடலாம் என்ற அபாயம் சூழ்ந்துள்ள ஈராக்கில் தாங்கள் மனிதக் கேடயங்களாகச் செயல்ப்படப் போவதாக அவர்கள் கடந்த வியாழக்கிழமை அறிவித்திருந்தனர். இக்குழுவில் பெரும்பாலானோர் பிரிட்டிஷ். அமெரிக்கப் பிரஜைகள்.

மனிதக் கேடயங்களாக பக்தாத் செல்ல உள்ளவர்கள் பெயர், அவர்கள் நிறுத்தப்பட உள்ள இடங்கள் குறித்த விவரம் பிரிட்டிஷ் பிரதமர் ரொனிபிளேயருக்கு ஏற்கனவே தெரிவிக்கப்பட்டது என்று அமைப்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, ஈராக்கில் போர் அபாயம் அதிகரித்துள்ளதால் அங்கு பயணம் மேற்கொள்ள வேண்டாம் என்று தனது பிரஜைகளுக்கு ஜப்பான் வெளியுறவு அமைச்சகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஈராக் தலைநகர் பக்தாத்தில் இருக்கும் ஜப்பானியரை அங்கிருந்து வெளியேறுமாறும் அது பரிந்துரை செய்துள்ளது. (பி)

# வெனிசுவேலாவில் நேசநாடுகள் தலையிட்டு அமைதி ஏற்படுத்த முயற்சி


(கராகஸ்)

வெனிசுவேலாவின் ஜனாதிபதி கியூகோஷாவிஸ்ற்கு எதிராகக் கடந்த 7வாரங்களாக இடம்பெற்றுவரும் வேலைநிறுத்தப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவர வெனிசுவேலாவின் நேசநாடுகள் முன்வந்துள்ளன.

இதன் காரணமாக பிரேசில், சிலி, மெக்ஸிக்கோ, ஸ்பெயின், போர்த்துக்கல், ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் வாஷிங்டனில் கூடி ஆராயவுள்ளனர்.

பிரேஸிலின் புதிய ஜனாதிபதியும் இடது சாரியுமான இனோசிலூலாடி சில்வா தலைமையில் இக் கூட்டம் நடைபெறவுள்ளது.

எனினும் இந்தக் கூட்டத்தில், ரஷ்யா, பிரான்ஸ், கியூபா ஆகிய நாடுகளை இணைத்துக் கொள்ள வேண்டும் என்று கூறிய ஜனாதிபதி அன்றைய கூட்டத்தில் தான் கலந்து கொள்ள முடியாத நிலை ஏற்படும் என்றும் கூறியுள்ளார். (பி-2)



அமெரிக்காவின் "ஏ அண்டு எம் பல்கலைக்கழகத்தில்" குளோனிங் முறையில் இரண்டு பூனைக்குட்டிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இரண்டு பூனைக் குட்டிகளையும் உருவாக்க வெவ்வேறு முறைகள் கையாளப்பட்டதால், இவற்றின் குணாதிசயங்கள் வெவ்வேறாக உள்ளன.



ஒட்டிப்பிறந்து அறுவைச் சிகிச்சை மூலம் பிரிக்கப்பட்ட தங்களது குழந்தைகளை அணைத்தபடி இரட்டிப்பு மகிழ்ச்சியுடன் குவபாதமாலா தம்பதிகள்.

# ஆயிரக்கணக்கில் கலைஞர்கள் கலந்து கொண்டனர்

(புதுடில்லி)

சற்குரு தியாகராஜ சுவாமிகளின் 156ஆவது ஆராதனை விழாவின் முக்கிய நிகழ்ச்சியான பஞ்சரத்ன கீர்த்தனை இசைக்கும் நிகழ்ச்சி நேற்று முன்தினம் திருவையாற்றில் பக்திப் பரவசத்துடன் நடைபெற்றது.

இதற்கு முன்னதாக தியாகராஜரின் இல்லத்திலிருந்து அவரது விக்கிரகம் ஊர்வலமாக அவரது நினைவிடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

அங்கு ஆயிரத்துக்கும் மேற்பட்ட கர்நாடக இசைக் கலைஞர்களும் ஆர்வலர்களும் இந் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். (பி-2)

## பயிர்வாடுவதைக் காணமுடியாமல்

# தமிழ்நாட்டில் மொத்தம் 8விவசாயிகள் மரணம்

(புதுடில்லி)

நீரின்றித் தமது பயிர்கள் கருகுவதைப் பார்த்து தமிழகத்தில் 8 விவசாயிகள் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் நாகபட்டணத்தில் 31 வயதுடைய விவசாயி ரயில் ஒன்றின் முன்னால் பாய்ந்து தற்கொலை செய்துள்ளார்.

விழுப்புரத்தைச் சேர்ந்த மற்றொரு பெண் விவசாயி தனது கரும்புப் பயிர்கள் கருகியதைப் பார்த்த அதிர்சசியில் மாரடைப்பால் இறந்துள்ளார்.

இதேபோன்று மற்ற ஒரு விவசாயியும் இவ்வாறே உயிரிழந்துள்ளார்.

காவிரி டெல்டாப் பகுதியில் இதுவரை 5பேர் தற்கொலை செய்துள்ளதுடன் 3பேர் அதிர்ச்சியால் இறந்துள்ளனர்.

கர்நாடக அரசு தமிழகத்திற்குக் காவிரி நீரை வழங்க மறுத்துவரும் நிலையில் தமிழக அரசு தமக்குரிய நீரைப் பெற்றுத்தரத் தவறிவிட்டதாக தமிழக விவசாயிகள் குற்றஞ் சாட்டிவருகின்றனர். (பி-2)

# 4இந்திய அதிகாரிகளை பாக். வெளியேற்றியது

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் உள்ள இந்திய ஹை கமிஷனில் பணிபுரியும் 4பேரை நாட்டைவிட்டு இரண்டு தினங்களில் வெளியேறுமாறு பாகிஸ்தான் அரசு உத்தரவிட்டுள்ளது.

இந்த நான்கு பேரில் மூன்று பேர் தூதரக அதிகாரிகள், ஒருவர் ஊழியர். இவர்கள் அனைவருமே விசா பிரிவில் பணிபுரிபவர்கள்.

அவர்கள் தங்களது பதவிக்கு ஒவ்வாத பணியில் ஈடுபட்டதாகவும் அதனால் வெளியேற வேண்டும் என்றும் பாகிஸ்தான் அரசு கூறியுள்ளது.

அவர்கள் நான்கு பேருக்கும் இரண்டு நாட்களும், அவர்களது குடும்பத்தினருக்கு 7நாட்களும் அவகாசம் அளிக்கப்பட்டது.

விபின் ஹாண்டா, ஆர்.பி.சிங் வக்கீல் ராமதாஸ், பி.சுந்தரம் ஆகியோர் வெளியேற உத்தரவிடப்பட்டவர்கள் ஆவர்.

இந்தியாவில் உள்ள பாகிஸ்தான் ஹை கமிஷனில் 4பேரை வெளியேறுமாறு இந்திய அரசு புதன்கிழமை உத்தரவிட்டது. இதற்கு பதிலடியாகவே பாகிஸ்தான் 4பேரை வெளியேறுமாறு கூறியுள்ளது. (பி)



ஆசிய கார் பந்தயத்தில் பங்கேற்க இருக்கும நடிகர் அஜித், கோவை வீரர் ராஜ்விர்தன் ஆகியோர் இதற்கான பயிற்சிக்காக ஸ்பெயின் நாட்டுக்குப் பயணம் மேற்கொள்கின்றனர். இப்பயிற்சித்திட்டம குறித்து இவர்களது பயிற்சியாளர் அக்பர் இப்ராகிம் விளக்கியபோது எடுக்கப்பட்ட படம்.

# 29-வது தேசியவிளையாட்டு விழாவை யாழில் நடத்த விரிவான ஏற்பாடுகள்

## பல்லாயிரம் பார்வையாளர்களை எதிர்பார்ப்பு

(தென்மராட்சி)

நாலாயிரம் விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் பங்கு பற்றும் 29வது தேசிய விளையாட்டு விழா முதல் தடவையாக எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சின் ஏற்பாட்டில் நடத்தப்படவுள்ள இக்கோலாகலமான விளையாட்டு விழாவினைக் கண்டு களிக்க தேசிய மட்டத்தில் இருந்து லட்சக்கணக்கான மக்கள் யாழ்ப்பாணத்தில் கூடவுள்ளவர் எனவும் அறியப்படுகின்றது.

இவ்விளையாட்டு விழா தொடர்பாக நேற்றையதினம் யாழ் செயலக மாநாட்டுமண்டபத்தில் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் அமைச்சின் செயலாளர் என். ஜீ. புஞ்சிதேவ, பிரத்தியேக செயலாளர் ஜெரோம் அமரசிங்கா, பணிப்பாளர் நாயகம் மில்ரன் அமரசிங்கா மற்றும் உயர்மட்ட அதிகாரிகளும் பங்கு பற்றியிருந்தனர்.

இத்தேசிய விளையாட்டு விழாவின் போது கிரிக்கெட், உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், மெய்வல்லுநர் போட்டிகள், வலைப்பந்தாட்டம், குத்துச்சண்டை, உட்பட 15 வகையான போட்டிகள் இடம்பெறவுள்ளன.

இப்போட்டிகள் யாழ். துரையப்பா விளையாட்டரங்கம் யாழ் மத்திய கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, சென் பற்றிக்ஸ் கல்லூரி, வை. எம். சீ. ஏ. உட்பட பல்வேறு இடங்களில் நடாத்தப்படுவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் விழாவின் ஆரம்ப வைபவம் கோலாகலமான முறையில் யாழ் துரையப்பா விளையாட்டரங்கில் நடாத்த உரிய ஏற்பாடுகள் செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இறுதி நாளன்று மாபெரும் இசை நிகழ்ச்சியும், கலாசார நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

நேற்றைய கலந்துரையாடலில் பொலிஸ் அத்தியட்சகர் கமால்தீன், யாழ். பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆனந்த செனவிரத்தின, துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, பிரதேச செயலர்கள், வடகிழக்கு மாகாண விளையாட்டுத்துறை உதவிப்பணிப்பாளர் எஸ் விமலராஜன் உட்பட வேறும் பலர் பங்கு பற்றியிருந்தனர். (உ-77,43)

## கிரிக்கெட் சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட விளையாட்டு அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் மென்பந்து சுற்றுப்போட்டி இன்று கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது (உ-19)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோட்டக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கோட்ட மட்ட வலைப்பந்து, கரப்பந்து மென்பந்து சுற்றுப் போட்டிகளை நடாத்துவது சம்பந்தமான கலந்துரையாடல் எதிர் வரும் 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப 2.00 மணிக்கு கோட்டக்கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

(உ-19)

## பொதுக்கூட்டம்

(தென்மராட்சி)

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சங்கத்தலைவர் பீ. என். சற்குணராஜா தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் யாழ் மாவட்டப்பாராளுமன்ற உறுப்பினர்கள் தென்மராட்சி பிரதேச செயலர் க. தேவேஸ்வரன், நகரசபைச் செயலாளர் எம். எஸ். சரவணபவன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர் புதிய நிர்வாகத்தெரிவும் நாளைய தினம் இடம்பெறவுள்ளது. (உ-77)

## மாலே சிறையில் உள்ள இலங்கையரை விடுவிக்க விடுதலைபுலிகளின் உதவி

(கொழும்பு)

மாலைதீவு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையரின் விடுதலைக்கு விடுதலைப் புலிகளின் தலைவர் வே பிரபாகரனின் உதவி நாடப்பட்டுள்ளது.

மாலைதீவு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் பெற்றோர் பாதுகாவலர் அமைப்பு நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அமைப்பின் தலைவர் பீற்றர் முதலிகே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவிக்கையில்;

மாலைதீவுச் சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் 35 பேரையும் விடுவிக்க உதவுமாறு ஜனாதிபதி பிரதமர் ஆகியோருடன் பலதடவைகள் முறையிட்டும் எந்தவித ஆக்கபூர்வமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதுவிடயத்தில் உதவ வேண்டும் எனக்கோரி விடுதலைப்புலிகளுக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுஎனறு குறிப்பிட்டார்.

மேற்படி தடுத்துவைக்கப்பட்டிருப்பவர்களில் 10 தமிழர்கள் அடங்குவர்எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (உ)

## வீடமைப்புக்கு தனியார் நிறுவனங்கள் உதவி

(கொழும்பு)

அரசாங்கத்தின் வீடமைப்புத் திட்டங்களுக்கு உதவ சில தனியார் நிறுவனங்கள் முன்வந்துள்ளன

இதற்கிணங்க குறைந்த வருமானம் பெறும் நிரந்தர வீடுகள் இல்லாத குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன

ஸ்திங்கர் ஸ்ரீலங்கா நிறுவனம் நுவரெலியா, அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் தலா 22 வீடுகளை அமைத்துக் கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது

இதற்கமைய வீடொன்றுக்கு தலா ஒரு இலட்சம் ரூபா அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளது. (உ-8)

## யுனிசெவ் நிறைவேற்றுப் பணிப்பாளர் விஜயம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் மற்றும் கலாசார அமைப்பான யுனிசெவ் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஹரோல்தொலமி எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை இலங்கை வரவுள்ளார்.

மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு இலங்கை வரும் இவர் கடந்த காலங்களில் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் இடம்பெற்ற போரினால் சிறுவர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள தாக்கங்கள் பற்றி ஆராயவுள்ளார்.

யுனிசெவ் அமைப்பின் இலங்கைக்கிளையின் தலைவி, ஜனாதிபதி, பிரதமர், மற்றும் முக்கிய அமைச்சர்களையும் சந்திக்கவுள்ளார்.

இதேவேளை இவர், வட பகுதிக்கு விஜயம் செய்து வன்னி மற்றும் யாழ். மாவட்டங்களில் உள்ள சிறுவர் இல்லங்களையும், யுனிசெப் நிறுவனத்தின் நிதி உதவியுடன் நடை முறைப்படுத்தப்பட்டு வரும் திட்டங்களையும் பார்வையிடவுள்ளார்.

சிறுவர் துஷ்பிரயோகத்துக்கு எதிரான ஊடகத் திட்டமொன்றையும் இக்காலத்தில் மேற்கொள்ளவுள்ளார். (உ-8)

## எளியனுக் கருளிற் குறைவாமோ?

கருதிரு மடியர் கழுபிணி யகல  
கருணைத ரிறையென் - றுனைநாளும்  
கதியெனப் பணியக் கதிபெற அருளுங்  
கையனென் றெவரு - முரைகோவே  
இருதுணை யொடுநின் றெமவினை மடிய  
இருநில மதனி - லருள்கோனே  
எனதுள மகிழ உனவிழி மலர்ந்து  
எளியனுக் கருளிற் - குறைவாமோ?  
பெருமன மிளகி அருளது சிதறித்  
திருவது பெருக - அருளாயோ?  
பிரியமொ டடியைப் பணிபவர் துயரில்  
புரளுவ துனக்குச் - சரியோதான்?  
அருமறை புகழும் அரியொடு அரனும்  
அழகொளி ரிணைவில் - வருகோனே  
அலையெறி கடலின் அலைஜதி சொலநின்  
றருளது பொழியும் - ஐயனாரே!

நாயன்மார்கட்டு  
இராசையா குகதாசன்

★ காரைநகர் பயாவில் ஐயனார் கோவில் அலங்கார உற்சவத்தையொட்டிய கவிதை

## தொண்டர் ஆசிரியர் எவரையும் நிரந்தரமாக்கும் உத்தேசமில்லை

### கல்வி அமைச்சர் கைவிரிப்பு

(கொழும்பு)

தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்கும் உத்தேசம் இல்லையென கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

மகரகம ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் நூற்றாண்டு பூர்த்தியை முன்னிட்டு நடைபெற்ற வைபவத்தில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பேசும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அந்நிகழ்வில் அமைச்சர் தொடர்ந்தும் பேசுகையில், தற்போது 6 ஆயிரம் சிங்கள மொழி மூலம் ஆசிரியர்கள் மேலதிகமாக உள்ளனர்.

இந்நிலையில் புதிய ஆசிரியர்களை நிரந்தரமாக நியமிப்பதன் மூலம் தற்போதுள்ள ஆசிரியர்களுக்கு சம்பளம் பெற்றுக் கொடுப்பதில் சிக்கல்கள் ஏற்படும்

கடந்த வருடங்களில் உலக வங்கியுடன் ஏற்படுத்திக் கொண்ட இணக்கப்பாடு காரணமாக ஆசிரியர்கள் பயிற்சிக்கல்லூரிகளை மூடிவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன், புதிதாக ஆசிரியர்களை நியமிக்கும் விடயத்தில் தேசியக் கொள்கையையும் பின்பற்ற வேண்டி உள்ளது.

இருப்பினும், வடக்கு கிழக்கு மாகாணத்தில் ஆசிரியர் பற்றாக்குறை இருந்து வருகிறது என தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வடக்கு கிழக்கு பகுதிகளில் ஆயிரம் தொண்டர் ஆசிரியர்களை நியமிப்பதற்கு ஆணைக்குழு அங்கீகாரம் வழங்கி இருப்பதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

## போர்நிறுத்தக் கண்காணிப்பு குழுவின் தலைவர் நாடு திரும்புகிறார்

### புதியவர் மார்ச்சில் பொறுப்பேற்பார்

(கொழும்பு)

இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் புதிய தலைவராக மேஜர் ஜெனரல் ரைஹெவ் ரெலக்ஸன் நியமிக்கப்பட்டுள்ளார்.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தற்போதைய தலைவரான ரொண்ட பியூறு ஹெவ்டே நாடுதிரும்பத்திட்டமிட்டுள்ளதைத் தொடர்ந்து புதிய தலைவர் நியமிக்கப்பட்டுள்ளார்;

இவர் பெப்ரவரி மாத இறுதிப்பகுதியில் அல்லது மார்ச் மாத முற்பகுதியில் இலங்கை வந்து தனது பதவியை பொறுப்பேற்கவுள்ளார்.

நோர்வே நாட்டவரான புதிய தலைவர் நோர்வே ஜியன், இராணுவத்தில் பல வருடங்களாக கடமையாற்றியுள்ளதுடன் 1989 ஆம் ஆண்டு தொடக்கம் 1994 ஆம் ஆண்டு வரை ஐக்கிய நாடுகளின் அமைதிப் படைகளுக்கான ஆட்சேர்ப்பு மற்றும் அவர்களுக்கான பயிற்சி வழங்கல் போன்றவற்றுக்கும் பொறுப்பாக இருந்துள்ளார்.

தவிரவும் 1994, 1995 ஆம் ஆண்டில் மசிடோனியாவில் ஐக்கிய நாடுகள் அமைதிப் படையின் கட்டளை அதிகாரியாகவும்,

1997 தொடக்கம் 2001 வரை எகிப்து, இஸ்ரேல் ஆகிய இருநாடுகளிற்கு இடையில் அமைதிகாக்கும் பணிகளை மேற்கொள்ளும் பல் தேசிய கண்காணிப்பு படையின் தலைவராகவும் கடமையாற்றியுள்ளார்.

இதேவேளை, கடந்த வருட ஆரம்பத்தில் இலங்கையில் சமாதான முயற்சிகள் ஆரம்பமான காலம்தொட்டு ஸ்கண்டிநேவிய நாட்டவர்களை உள்ளடக்கிய இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவராக ரொண்ட் பியூறு ஹெங்டே கடமையாற்றிவந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

# ஜனாதிபதி, ஜே. வி. பி. மற்றோர் சந்திப்பு பெப்ரவரி 6 ஆம் திகதி

(கொழும்பு)

ஜனாதிபதிக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையிலான மற்றோர் சந்திப்பு அடுத்த மாதம் 6 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் பொது இணக்கத்தை ஏற்படுத்த மக்கள் விடுதலை முன்னணி சமர்ப்பித்துள்ள அறிக்கைக்கு இச்சந்திப்பின் போது ஜனாதிபதி பதிலளிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, 28 ஆம் திகதி இடம் பெறவுள்ள பாராளுமன்ற அமர்வுக்கு முன்னதாக 27 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற குழுக் கூட்டத்தில் அதிகாரப் பரவலாக்கல் சமஷ்டி ஆட்சி நிர்வாகம் குறித்து எம்.பிக்களின் கருத்தை ஜனாதிபதி கேட்டறியவுள்ளார்.

அத்துடன், சமஷ்டி ஆட்சி குறித்து முன்னாள் பிரதி கல்வி அமைச்சர் பேராசிரியர் விஸ்வ வர்ணபால எம்.பிக்களுக்கு விளக்கமளிக்கவுள்ளார். (உ)

## நாடு முழுவதும் 'மக்கள் கோஷம்'

(கொழும்பு)

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு தனியார் மயப்படுத்தல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து எதிர்வரும் மாதம் 18 ஆம் திகதி நாடு முழுவதும் மக்கள் கோஷம் என்ற தொனிப் பொருளில் போராட்டம் ஒன்றை நடத்தவிருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அன்றையதினம் பகல் 12 31 மணிக்கு ஆலய மணி ஒரே நேரத்தில் ஒலிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ)

## பெற்றோலிய பொருட்கள் விலை அதிகரிக்கும்

(கொழும்பு)

ஈராக் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தினால் எரிபொருள்களின் விலை அதிகரிக்கும் என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தகம் விமலசேன தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கு நாடுகளில் யுத்தம் ஏற்பட்டால் கப்பல் மற்றும் காப்புறுதிக் கட்டணங்கள் அதிகரிக்கும் இதனால் பெற்றோலியப் பொருள்களின் விலை அதிகரிக்கும்.

அத்துடன் அந்நாடுகளில் இருந்து பெற்றோலிய பொருள்களை கொள்வனவு செய்ய முடியாத நிலையும் ஏற்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (உ-8)

## இலவச சீருடைத்துணி 27 இல் வடக்கே வருகிறது

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கான இலவச சீருடைத்துணி இம்மாதம் 27 ஆம் திகதி கொழும்பிலிருந்து வட பகுதிக்கு எடுத்துவரப்படவுள்ளன.

அடுத்தமாத நடுப்பகுதி தொடக்கம் மாணவர்கள் இவ் இலவச சீருடைத்துணிகளை பெற்றுக்கொள்ளலாம் என கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் தில்லை நடராஜா தெரிவித்துள்ளார்.

சுமார் 56 இலட்சம் சீருடைத்துணிகள் மாணவர்களுக்கு இவ்வாண்டில் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை, இவ்வருடம் முதலாம்ஆண்டில் அனுமதிக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கும் சீருடைத்துணிகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான, விண்ணப்பங்களை பெற்றோர் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பிவைக்குமாறு மேலதிக செயலாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (உ-8)

## 'புலிகளின் குரல்' ஆட்சேப மனு மீது விசாரணை

(கோட்டை)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு 'புலிகளின்குரல்' வானொலியை பண்பலை அலைவரிசைகளில் ஒலிபரப்புவதற்கு அனுமதி வழங்கப்பட்டதை ஆட்சேபித்துமேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்கள் மீதான விசாரணை கடந்த புதன்கிழமை ஆரம்பமானது.

விடுதலைப் புலிகளுக்கு புலிகளின் குரல் வானொலி ஒலிபரப்புக்களை நடத்துவதற்கு அனுமதி வழங்கியதையும் நேரவே அனுசரணையுடன் வானொலிக்கருவிகள் தருவிக்கப்பட்டதையும் ஆட்சேபித்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மூன்று மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

பியசேன திஸநாயக்க டி.ஏ. அஜித் தொந்தகுமார ஜயதிலக்க மற்றும் ஜானக்க பண்டார தென்னக்கூன் ஆகிய மூவருமே இந்த மனுக்களைத் தாக்கல் செய்துள்ளவர்கள்.

நீதிபதிகள் நிகால் ஜயசிங்க கே. விக்னேஸ்வரன் ஆகிய இரு நீதிபதிகள் முன்னிலையில் மனுக்கள் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

பிரதிவாதிகளுக்கு நோட்டீஸ் பிறப்பிக்குமாறுமனுதாரின் சட்டத்தரணிக்கு நீதிபதிகள் உத்தரவு பிறப்பித்தனர்.

சமிகத்திணைக்கள தலைமைப்பணிப்பாளர், மக்கள் தொடர்பு சாதன அமைச்சின் செயலாளர், இலங்கை டெலிகொமினிகேஷன் ஒழுங்காற்று ஆணையம் மற்றும் இருவரும் இந்த மனுக்களில் பிரதிவாதிகளாககுறிக்கப் பட்டுள்ளனர்.

மேற்படிவானொலிக்கு அனுமதி வழங்கியிருப்பதானது சட்ட விரோதமும் தேசியப் பாதுகாப்புக்கு ஆபத்தானதுமாகும் என்று மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர்.

புலிகளின்குரலின் ஒலிவீச்சு புதிய கருவிகள் வருகையின் பின்னர் விஸ்தரிக்கப்பட்டிருப்பதாகவும் வடமத்திய மாகாணத்தை அது முழுமையாக உள்ளடக்குவதாகவும் குருநாகலையிலும் அதனை கேட்கக்கூடியதாகவிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

பெப்ரவரி 11ம் திகதி மேல் விசாரணை நடைபெறும். (பி)

## தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்குக

(திருகோணமலை)

வடக்கு-கிழக்கில் நீண்டகாலமாக தொண்டர் ஆசிரியராகக் கடமையாற்றுவோருக்கு நிரந்தர நியமனம் வழங்க கல்வி அமைச்சைக் கோரும் தீர்மானத்தை அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் திருகோணமலை மாவட்டக் கிளையின் செயற்குழுக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. (உ)

## ஜனாதிபதியின் கோரிக்கைக்கு முடிவான பதில் இன்னும் இல்லை

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தையில் ஜனாதிபதியின் பிரதிநிதியை இணைத்துக்கொள்வது குறித்த உறுதியான முடிவை அரசு இன்னமும் எடுக்கவில்லை என்று ஜனாதிபதியின் பேச்சாளர் ஹரிம் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்துக்கூறியுள்ள ஹரிம் பீரிஸ்,

அரசாங்கம் இது குறித்த சரியான முடிவினை அறிவித்த பின்னரே தனது தரப்பில் பேச்சில் கலந்து கொள்வது யார் என்பதை ஜனாதிபதி தீர்மானிப்பார்.

சமாதானப்பேச்சுவார்த்தையில் ஜனாதிபதியின் பிரதிநிதியையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என கடந்த மே மாதம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு இதுவரை சரியானபதில் அளிக்கப்படாமை கவலைக்குரியது என்று கூறியுள்ளார். (உ)

## கண்காணிப்புக் குழுவுக்கு சமாதானச் சூழலில் புதிய அணுகுமுறை அவசியம் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு யுத்தச் சூழ்நிலையில் பணியாற்றியதை விட தற்போதையசமாதானச் சூழ்நிலையில் புதிய அணுகுமுறையுடன் செயற்பட வேண்டியுள்ளது.

திருகோணமலை மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர் கொட்றிபி குணதிலக இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் பேசுகையில்,

உயர் பாதுகாப்பு வலயத்தில் மீள் குடியேற்றம், காணாமல் போனோர் விவகாரம், தனிமனித உரிமை பேணல் போன்ற விடயங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

இந்த விடயங்களில் புதிய அணுகுமுறையுடன் செயற்படவேண்டி உள்ளது. இது தொடர்பான ஆணைக் குழுவின் நிலைப்பாட்டைக் கண்டறியவே திருகோணமலை மாவட்டத்துக்கான ஒரு நாள் விஜயத்தை மேற்கொண்டேன் என்றும் தெரிவித்தார். (உ-8)

## வட-கிழக்கில் 20ஆயிரம்பேர் காணாமல் போயுள்ளனர்

(கொழும்பு)

கடந்த பதினைந்துவருடங்களுக்கு மேலாக வடக்கு கிழக்குப்பகுதிகளில் இருந்து சுமார் 20ஆயிரம்பேர் காணாமல் போயுள்ளதாக சர்வதேச செஞ்சிலுவைக் குழுவினரிடம் முறைப்பாடுசெய்யப் பட்டுள்ளது.

காணாமல் போயுள்ள 20ஆயிரம்பேரில் 9ஆயிரம் பேரின் பெயர் விபரங்கள் மட்டும் கண்டறியப்பட்டுள்ளது ஏனைய 11ஆயிரம்பேரின் நிலைஎன்னஎன்பது குறித்து ஆராய்ந்துகண்டறிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சர்வதேச செஞ்சிலுவைக்குழுவின் திருகோணமலைமாவட்டப் பொறுப்பதிகாரி டினார்வினர் தெரிவித்துள்ளார்.

தாய்லாந்தில் நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்த்தையின் போது அரசும் விடுதலைப்புலிகளும் கூட்டாக விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாகவே சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் இந்த நடவடிக்கையை மேற்கொள்ளவிருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ)

## பாடசாலை மாணவன் கைக்குண்டுடன் கைது

(கொழும்பு)

அங்குணகொலபத்தை பிரதேசத்தில் பாடசாலை மாணவன் ஒருவன் கைக்குண்டுடன் கைது செய்யப்பட்டுள்ளான்.

இம்மாணவனுடன் நின்றுகொண்டிருந்த மற்றொரு மாணவர் தப்பிச் சென்றுள்ள போதிலும் தப்பிச் சென்றவர் விட்டுச் சென்ற துப்பாக்கியொன்றும் அதற்கான ரவைகளும் மீட்கப்பட்டுள்ளன.

பாடசாலை மாணவர்களுக்கு ஆயுதங்கள்வழங்கியது யார்? என்பதனை கண்டறிய பொலிஸார் தீவிர விசாரணைகளை நடத்திவருகின்றனர்.

இராணுவத்தை விட்டு தப்பிச் சென்றவர்கள் இவ் ஆயுதங்களை பாதாள உலகக் கோஷ்டியினருக்கு விற்றிருக்கலாம் எனவும், அவர்கள் மாணவர்களை தமது தேவைகளுக்காக பயன்படுத்தியிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-8)

## காணாமல் போனோர் குறித்த விசாரணைகளில் சங்க பிரதிநிதிகள் பங்கேற்பு

(திருநெல்வேலி)

யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் நேற்று ஆரம்பமான வடபகுதியில் கைதாகி காணாமல் போனோர்தொடர்பானவிசாரணைகளில் காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கம் கலந்துகொண்டது.

மேற்படி விசாரணைகளில் தாம் பங்குகொள்வதாயின்,

- விசாரணைகள் தமிழில் நடத்தப்பட வேண்டும்,
- போக்குவரத்துப்படிவழங்கப்படவேண்டும்;
- விசாரணைக் குழுவில் தமது சங்கப் பிரதிநிதி ஒருவர் அங்கம் வகிக்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை சங்கம் முன்வைத்திருந்தது.

மேற்படி கோரிக்கைகளுக்கு உடன்பாடான முடிவு வழங்கப்பட்டதைத் தொடர்ந்தே சங்க உறுப்பினர்கள் விசாரணைகளில் கலந்து கொண்டனர்.

இதேவேளை, மேற்படி சங்க செயலாளர் விசாரணை அறிக்கை தமக்கும் வழங்கப்படவேண்டும் விசாரணைகள் தொடர்ந்தும் மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். அலுவலகத்தில் இடம் பெற வேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்துள்ளார். (உ-43)

## மூளைக்காய்ச்சலால் 19பேர் மரணம்

இரத்தினபுரி மாவட்டத்தில் மூளைக்காய்ச்சல் காரணமாக கடந்த 20 ந் திகதிவரை 19 பேர் உயிரிழந்துள்ளனர்.

மூளைக்காய்ச்சலால் பாதிக்கப்பட்ட 60 பேர் இரத்தினபுரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருவதாக சப்பிரகமுவ மாகாண சுகாதார அமைச்சர் அனுராதபத்திரன தெரிவித்துள்ளார்.

ஜப்பானிய 'என்ஸபொலயின்ஸ்' எனப்படும் மூளைக்காய்ச்சலே இம் மரணங்களுக்குக் காரணமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## ஒன்றுகூடல் வைபவம்

யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபையின் ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் ஒன்றுகூடல் வைபவம் இன்று யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ் ஒன்றுகூடல் வைபவத்திற்கு கூட்டுறவுச்சங்கத் தலைவர் பெ கனகசபாபதி பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்கிறார். (ம)

## பௌசிக்கு எதிரான தடைஉத்தரவு நீடிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் இருந்து பொதுஜன ஐக்கிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் ஏ. எச். எம். பௌசியை நீக்குவதற்கு எதிரான தடை உத்தரவு மார்ச் மாதம் 19ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

தேசிய அரசாங்கம் ஒன்று அமைப்பது குறித்து பேசி வருவதனால் தன்னைக் கட்சியில் இருந்து நீக்கத்தயாராவதற்கு எதிராக பௌசி கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்திருந்தார்.

மேற்படி வழக்குவிசாரணை நேற்றுமுன்தினம் கொழும்பு மாவட்ட நீதிபதி முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோதே நீதிவான் இத் தடைஉத்தரவை நீடித்துள்ளார். (உ-8)

# அகத்தினை நெகிழ வைத்த அழைப்பினை ஏற்று முதுமை பாராது நானும் லண்டன் சென்றேன்

## அக்கரைச் சீமையின் அனுபவங்கள் 9

நாங்கள் பிரித்தானிய அரும்பொருளகம்,பிரித்தானியநூலகம்,நாடக மகாகவி ஷேக்ஸ்பியரின் பிறந்த இடம், பக்கிங்ஹாம்மாளிகை, டயானா நினைவாலயம் முதலிய இடங்களுக்குச் சென்றதும்,கண்டதும் அநுபவித்தனவும் விரிக்கிற் பெருகும் என்றஞ்சி ஒரு சில மட்டும் கூறி அமைகின்றேன்.

### பிரித்தானிய அரும்பொருளகம்

பிரித்தானிய அரும்பொருளகம் ஆபிரிக்கா,அமெரிக்கா, ஆசியா, பிரித்தானியா,ஐரோப்பா,எகிப்து ,கிரீஸ் ,ரோமாபுரி ஆகியவற்றின் புராதன அரும்பொருள்களை மிகவும் முயன்று சேமித்துப் பேணிவருகின்றது.மிகப் பிரமாண்டமான மண்டபங்கள் அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு நாட்டினதும் பழம்பெரும் வரலாற்றினையும், பண்பாடுகளையும் அங்கு காட்சிக்கு வைத்துள்ள அரும்பொருள்கள் கொண்டு மௌனகாவியம் பாடிக்கொண்டிருக்கின்றன. ஆபிரிக்காவின் பழங்குடிமக்களின் உடையலங்காரங்களோடு இடைவிடாது நடனமாடும் ஆபிரிக்க மனித உருப் பொம்மைகள் கண்களைப் கருத்தையும் கவ்வி இழுக்கின்றன.

எகிப்தின் பிரமிட்டுகளை நேரில் காணப்பது போன்ற பிரமிப்பினை ஏற்படுத்துகின்றன. ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மரணித்த மன்னர்களின் மம்மிகள் அருவருப்புக் கலந்த ஆனால் புதுமையுணர்வை நல்கி நெஞ்சைக் கவர்கின்றன. இந்தியப் பிரிவினுள்ளே நுழைந்த பொழுது ஓர் அனுபவக் உணர்வும் பெருமிதமும் உண்டாகத் தவறவில்லை. இந்தியவரலாறு, இந்தியநாகரிகம் என்பவற்றை வரலாற்றுப் பாடமாகப் படித்திருந்தால் அவற்றிற்கான சான்றுகளைக் காண்கையில் நிதர்சனக் காட்சி உணர்வும் அவற்றோடு கூடி வாழ்வது போன்றதோர் உரிமை உணர்வு ஏற்படுத்த மறக்க முடியாது.

ஒவ்வொரு பிரிவிலும் வழிகாட்டிகள்நின்று நமக்குப் பொருள்களைப்பற்றிய வரலாறுகளை விரித்துரைக்கின்றனர்.

ஆனால் அரும்பொருட்களுக்கு அட்டைகளிலெழுதியோ அச்சிட்டோ வைத்திருந்தவற்றை வாசித்துத் விளங்கிக் கொள்வதுவசிதாய் இருந்தது உண்மையே.ஆனால் ஒரே மனித்தியாலங்களுக்குள் எல்லாவற்றையும் வாசித்து விளங்குவது முடிந்த காரியம் அல்ல. இருப்பினும் அவ்வப்பகுதியின் தந்த வழிகாட்டிக் கைநூல்கள் மூலம் அரும்பொருளகத்தின் உள்ளடக்கத்தைக் கணிசமான அளவு அறிய முடிந்தது. (அவற்றைத் தொகுத்துத் தமிழில் எழுதினால் அதுவே பெரியதொரு புத்தகமாகிவிடும். ஒவ்வோராண்டும் புதுப்புது வருகைப்பொருட்கள் காட்சிக்கு வைக்கப்படுவதால் இதனைப் பார்வையிட்டு முற்றுமுழுதான அறிவினை என்றுமே பெறுதல் இயலாது.)

### பிரித்தானிய நூலகம்

பிரித்தானிய நூலகம் (*The British Library*) ஐரோப்பாவிலேயே இரண்டாவதிடத்தை வகிப்பது என்று கூறினார்கள் அதன் விசாரணைப் பிரிவிலேயே ஐவருக்கு மேல் பணி புரிகிறார்கள் என்னை அழைத்துச் சென்ற இளைஞர் விசாரணை அலுவலர் ஒருவருக்கு 'இவர் கலாநிதி சொக்கலிங்கம் இலங்கையில் இருந்து வருகிறார் உங்கள் நூல் நிலையத்தில் சில காலம் நூல்களைப் படித்து ஆய்வு செய்ய வந்துள்ளார்' என்று அறிமுகம் செய்தார். கேட்டவரின் முகத்தில் மலர்ச்சி.'உங்களுக்கு நல்வரவு' என்று கூறி இருக்கையில் அமருமாறு தயவாக வேண்டினர். அமர்ந்தேன்.

எல்லாவற்றுக்கும் காரணம் நான். யாழ்.பல்கலைக்கழகத்தின் கலாநிதி 'கௌரவப்பட்டம்' பெற்றவன் என்பதினாலேயே. அவ்வேளையில் ,எங்களிற்சிலர் பல்கலைக்கழகம் வழங்கும் கௌரவப்பட்டத்தினைக் கையாள்வது கௌரவக் குறைவு என்று கருதுவதையும், கூறுவதையும் அதனைத் தேவை ஏற்படும் போது கையாளாது, அப்பட்டத்திலும் தாங்கள் உயர்ந்தவர்கள் என்று கருதுவதுமெல்லாம் என் நினைவில் வந்தன. தரப்பட்ட பட்டத்தினைக் கௌரவிக்காமையும் ஒரு போலிக் கௌரவந்தான்!

விசாரணை செய்தவர் என்னிடம் ஒரு விண்ணப்பப்படிவத்தினை நீட்டி நிரப்பித்தருமாறு வேண்டினார். அதில் என் பெயர் கல்வித்தகைமை, லண்டனில் நான் தங்கியிருக்கும் முகவரி, இலங்கையில்(யாழ்ப்பாணத்தில்) என் நிரந்தர முகவரி என்பன கேட்கப்பட்டிருந்தன, நிரப்பிக் கொடுத்தேன்.

மூன்றே மூன்று நிமிடங்களில் என் நிழற்படம், பெயர், நூலகத்தினை நான் பயன்படுத்தவுள்ள கால எல்லை. (ஐந்து வருடங்கள் 29 ஆகஸ்ட் 2007 வரை) நான் சென்ற நாளான 29 ஆகஸ்ட் 2002 இலிருந்து ஐந்து வருடங்கள்) யாவும் கணனிப்படுத்தப்பட்டு அங்கத்துவ அட்டை ஒன்று எனக்கு வழங்கப்பட்டது.

'பிரித்தானிய நூலகம் சர்வதேச அளவில் ஆய்வுகள் நிகழ்த்துவோரிற்கு உதவுமாறு அமைந்தது. இதனுடைய முதன்மையான கடமையானது பிற நூலகங்களிலே கிடைக்க முடியாதனவற்றையும் நூலகங்கப் பயனாளருக்கு அடைய வாய்ப்பளிப்பதே. சிதைந்து போகும் நிலை

வில்லியம் ஷேக்ஸ்பியர் பிறந்த இல்லம்



யிலுள்ள வாசிப்புக்குரிய நூல்கள் ,ஏடுகள், பத்திரிகைகள் முதலியவற்றைப் பாதுகாத்துப் பேணுவதும் இந்நூலகத்தின் பணியாகும். இப்பணியின் காரணமாக மற்றைய அறிவுநூல்தேட்ட நூலகங்கள் போல இவற்றை எடுத்துச் சென்று பயன்படுத்துவதாகிய நெகிழ்ச்சியினை கையாள முடியாதுள்ளோம்' என்று தனது தனித்துவத் தன்மையை இந்த நூலகம் பிரகடனப்படுத்தியுள்ளது. (*What makes the British Library Differance?( The British Library-Introduction*) கீழ்நாட்டியல் மானிடவியல், விஞ்ஞானம்,தொல்லியல், அருஞ்சுவடிகள் எனப் பல்பிரிவுகளாக வகுக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவும் தனித்தனியாக மாடி மண்டபங்களில இயங்குகின்றன. ஒவ்வொரு பிரிவிலும் கணனிப்பொறிகள் பொருத்தப்பட்டு அவற்றில் தேவையான நூலின் பெயரைப்பொறித்து நூலகப்பணியாளிடம் அளித்தால் அவர் அதனைத் தேடிக் (*குறைந்தது 70 நிமிடங்களுக்குள்*) கையளிப்பார்.

நூல்களைப் பெற்று வாசித்துக் குறிப்பெடுத்து மேலும் தொடர விரும்புவோர்க்கு வங்கிகளில் வழங்குவது போல பூட்டகங்கள் வழங்கப்படுகின்றன. குறித்த வாசகர் தாம் எடுத்த நூல்களைத் தமது தேவை முடியும் காலம் வரை பூட்டகங்களுக்குள்ளே வைத்துப் பூட்டிப் பயன் செய்யலாம்.

சில சந்தர்ப்பங்களில் தமது வசம் இல்லாத நூல்களைப் பிற நூலகங்களில் இருந்து பெற்று வழங்குவதும் உண்டு என்று என்னை அழைத்துச் சென்ற இளைஞர் கூறினார். எக்காரணங்கொண்டும் நூலை வெளியே எடுத்துச்செல்ல முடியாத இறுக்கம் இங்கு நிலவுகின்றது.

நான் சென்று நூலகப்பிரிவுகளைப் பார்வையிட்ட பொழுது சீக்கியர், நீக்றோவர்,வெள்ளையர் முதலாம் பல இனத்தினர் முப்பதிலிருந்து எழுபது வயது கடந்தவர் வரை பலரும் வாசிப்பிலும் குறிப்பெடுப்பதிலும் ஈடுபட்டிருக்கக் கண்டேன்.

'யாதானும் நாடாமல் ஊராமால் என்னொருவன் சாந்துணையுங் கல்லாதவாறு'

என்ற வள்ளுவர் வாய்மொழிக்கு நிதர்சன சாட்சியங்களாக இவர்கள் என் கண்களுக்குத் தோன்றினார் கள்.

வாசகர்களின் சிறுபசி,தாகம் என்பவற்றைப் போக்கிட உணவு விடுதியும் இக்கட்டடப்பிரிவில் ஒருசார் இயங்குவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

1851 இற்கு முன்பு வெளியாகி பெறுதற்கு . அரியனவான நூல்களுக்கும் இசைத் தொகுப்புக்குமெ னத் தனிப்பிரிவும் உள்ளது. எல்லா வகையிலும் கல்வியாளருக்கு அருங்கலைக்கருவூலமாக பிரித்தானிய நூலகம் நிலவுவதைக் கண் கூடாகச் கண்டேன்.

### ஷேக்ஸ்பியர் பிறந்த ஊர்

''உலக மகாகவி ஷேக்ஸ்பியரின் நூல்களையா, இந்திய துணைக் கண்டத்தையா எதனை இழக்க நீர் விரும்பமாட்டீர்?'' என்று ஆங்கில அறிஞர் ஒருவரைக் கேட்ட பொழுது ''ஷேக்ஸ்பியரின் நூல்களை இழக்க ஒரு போதும் ஒருப்படேன்'' என்று அவர் சொன்னாராம். ஆம்! வில்லி யம் ஷேக்ஸ்பியர் (*1564-1616*) ஆங்கிலேயருக்கு அருமையும் ஆங்கிலத்துக்குப் பெருமையும் அகில உலகுக்கும் அறிமுகமுமான புகழ் பூத்த மாபெரும் நாடக மகாகவிதான்.

என் சகபாடியாய் பலாலி ஆசிரிய கலாசாலையில் பயின்ற அமரர் வன்னியசிங்கத்தின் மகனின் வழிகாட்டலில் நானும்,பத்மநாபஐயரும், மு.புஷ்பராஜனும்,மகாலிங்க சிவமும் ('மாலி' என்று நண்பர்களால் செல்லமாக அழைக்கப்படும் மூத்தபத்திரிகையாளர்) அவரின் காரிலேயே ஷேக்ஸ்பியரின் பிறப்பிட மாகிய ஸ்ராட்போட்-அப்போன்- அவொன் (*Strat fort upon- Avon*) க்கு ஒருநாள் காலைப்பொழு தில் சென்றோம். ஐயர் கொணர்ந்த நொறுக் குப் பண்டங்களும் என்னுடன் வந்தவர்களின் கலகலப்பான உரையாடலும் வானுயர் விருட்சங்கள் எல்லை கட்டிய வீதியும் கிராம்ப்புறத்தின் இயற்கை வனப்பும் (பாதையோரமாக பழங்கால உடையில் குதிரையில் ஒருவர் சென்ற காட்சி இப்பொழுதும் மனக்கண்ணில் நிற்கிறது) சேர்ந்து மிகுந்த உற்சாகத்தை அளித்தன.

எம்மை முதலில் வரவேற்றது ஸ்ராட்போட்டின் சந்தையோடு கூடிய சிறிய பட்டணம் தான். இங்கு தான் பட்டணத்தில் பிரபலமாயிருந்த தமது தந்தை ஜோன் ஷேக்கின் அரவணைப்பில் வளர்ந்து ஆளானார். பட்டணத்திலிருந்து அடுத்துச் சென்றது அவர் பிறந்த வீடு. அதனை அன்றி ருந்த மேனி அழியாமல் இன்றும் பேணிக் காத்து வருகின்றனர். அவருடைய வாழ்க்கையோடு தொடர்புடைய சின்னங்கள், பொருள்கள், தளபாடங்கள், அவர் இருந்து எழுதிய நாற்காலிமேசை, அவருடைய ஞானஸ்நான பதிவுப் புத்தகம், கையெழுத்துப் பிரதிகள் முதன் முதல் அச்சாகி வெளிவந்த நாடகம், அவர் நாடகம் எழுதி நடித்த *Globe Theatre* இன் மாதிரி வடிவம் அவர் மணம் செய்து கொண்ட ஆன் ஹதவே (*Anne Hathaway 1582*)ன் உருவப் படம், சகநடிகர் போன்றோரின் படங்கள் சமயலறை கூதல்காயும் தீட்டறை என்ற பலவும் காட்சிக்கு வைக்கப்பட்டு அவர் வாழ்ந்த காலத்தையே எம் கண்முன் கொண்டு நிறுத்துகின்றனர்.

அளவான மின் வெளிச்சத்தில் விசேட கவனிப்புக்குள்ளாக வேண்டிய பகுதிகளை மட்டும் புலப்பட வைக்கும் உத்தியைப் பார்த்த பொழுது அதனை நாமும் பின்பற்றினால் கவனக்கலைப்பின்றி குறித்த விடயத்தை மட்டும் உள்ளீர்க்க முடியுமல்லவா; என்ற எண்ணம் என்னுள்ளே முளைவிட்டது உண்மையே. டயானாவின் நினைவாலயத்திலும் இந்த உத்தி கையாளப்பட்டிருப்பதும் இவ்விடத்தில் நினைவு கூரத்தக்கதே.

ஷேக்ஸ்பியரின் கலைவாழ்க்கையோடு நின்று விடாது அவரது தனிப்பட்ட வாழ்க்கையின் ஒவ்வோரந்தத்தையும் மிக நுணுக்கமாகத் தொகுத்துத் தந்திருப்பது ஆங்கிலேயரின் வரலாற்று உணர்வினையும் செய்நேர்த்தியையும் நன்கு புலப்படுத்தியது. ஷேக்ஸ்பியரின் சொத்து விபரங்கள், அவரின் மரணசாதனம், பிள்ளைகள், பேரர், பேர்த்திகள் முதலாக அவரது பரம்பரை விபரங்கள் யாவுமே பேணப்பட்டு அவருக்குரியன எனக் கொள்ளப்படும் ஐந்து வீடுகளிலே காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றையும் விபரிப்பதென்பது சிரமமானதே.

ஷேக்ஸ்பியர் பிறந்த இல்லத்து முன்றலின் வடகிழக்கு மூலையில் வங்கத்து மகாகவிதாசரின் சிலை இந்தியத் தூதரகத்தால் நிறுவப்பட்டுள்ளமையும் இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கதாகும். ஸ்ராட்போட்டில் அவர் கற்ற பாடசாலையான ஆறாம் எட்வேர் அரசர் இலக்கணப் பள்ளி (*Grammer School*) அன்றுள்ள மெருகு அழியாது இன்றும் இலங்கக் கண்டேன். இப்பாடசாலை கி.பி 15 ஆம் நூற்றாண்டிலோ அல்லது 16 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலோ தொடங்கியதாகலாம் என்கிறார்கள். அக்காலத்தில் பயன்படுத்தப்பட்ட மாணவர் மேசை ஒன்று (*Desk*) காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றது.

நீண்டோடும் நதியும் மலர்வனமும் பச்சைப் பசிய புல்வெளியும் அழகிய வீதியும் அமைந்து அவற்றின் பின்னணியிலே காவிப்பூச்சுடன் கூடிய

சொக்கன்

ஷேக்ஸ்பியர் நாடக அரங்கமண்டபம் எழிலுடன் காட்சி தருகின்றது. இங்கு ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் அவ்வப்போது அரங்கேற்றப்படுவதாக அறிந்தேன். ஆனால் துரதிர்ஷ்டவசமாக நாங்கள் சென்ற அன்று எவ்வித நாடகமும் நடைபெறவில்லை.

### டயானா நினைவாலயம்

நானூறு ஏக்கர் கொண்ட பெருநிலப்பரப்பில் இளவரசர் சாள்சின் முன்னாள் மனைவி டயானாவின் நினைவாலயத்தைக் காணும் வாய்ப்பும் கிட்டியது. பல்வேறு விமர்சனங்களுக்கும் முகங் கொடுத்து வந்த ஒரு பெண், தான் அடைந்த மரணத்தின் மூலம் திடீரென்று மக்களின் அனுதாபத்துக்கும், புகழுககும் உரித்தானதன் அறிகுறி தான் இந்த நினைவாலயம்.

பக்கிங்ஹாம் மாளிகையையும், அதன் ஒரு சார் அமைந்த அரச குடும்பத்தினரின் பல காலத் தொகுபபுக்களான தங்கச் சிம்மாசனங்கள், முடிகள், ஆடம்பரப்படுக்கைக் கட்டில்கள், தளபாடங்கள் எனப்பலவும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள காட்சியகத்தையும் பார்வையிட்டேன்.

''உலகெங்கும் தன் ஆதிக்கத்தைப் படரவிட்ட பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், அங்கெல்லாம் கொள்ளை கொண்ட பொருட்களை பார்க்க உள்ளம் குமுறுகின்றது. இவை அவர்களின் குடியேற்ற நாடுகளின் அடிமைத்தனத்திற்கும் ஏமாளித்தனத்திற்கும் சின்னங்களாக விளங்குகின்றன''

உண்மைதான் பிரித்தானிய அரசுக்கு அடிமைப்பட்டதும், கொள்ளை கொடுத்ததும் எமது மூதாதையரின் அடிமைப்போக்கையும், ஏமாளித்தனத்தையுமே வெளிச்சமிட்டுக் காட்டுகின்றன என்பதற்கு ஐயம் இல்லை.

*வளரும்*

---

## வீடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கி வரும் திரைப்படக் காட்சித் தொடரில் *FAR AWAY SUNSET* என்னும் ஜப்பானிய திரைப்படமும், *ALOKE BANERJEE, JAYDTP MUKHEPJEE* ஆகியோர் இயக்கிய குழந்தைத் தொழிலாளர்கள் பற்றிய ஆவணத் திரைப்படமான *MILES TO GO* எனும் திரைப்படமும் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

ஆர்வலர்கள் எவரும் கலந்து கொண்டு பயன்பெறலாம் என புறநிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (உ)

## கருத்துரை

(யாழ்ப்பாணம்)

ஒழுங்கமைப்பு இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச நிலைய ஏற்பாட்டில் இன்று காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக பொருளியல்துறை மண்டபத்தில், 'இலங்கையின் வடக்கு-கிழக்கு மாகாணத்தின் பொருளாதார மீளமைத்தலில் உள்ள தடைகள்' என்னும் தலைப்பிலான கருத்துரை இடம்பெறவுள்ளது.

துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில், மேற்படி தலைப்பிலான கருத்துரையைக் கலாநிதி முத்துக் கிருஷ்ணா சர்வானந்தன் வழங்கவுள்ளார். (உ-5)

## கிரிக்கெட் போட்டி

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழகமும், சனசமூக நிலையமும் இணைந்து வருடாந்தம் நடத்தி வரும் விக்ரம்-ராஜன் கங்கு ஞாபகார்த்த 30 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் போட்டியில் நாளை ஞாயிற்றுக் கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் எதிர் யாழ். பல்கலைக்கழக விளையாட்டுக்கழகம் ஆகியன மோதவுள்ளன. (உ)

## கலந்துரையாடல்

(காரைநகர்)

1992ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டிப் பரீட்சை மூலம் தெரிவாகி நியமனம் பெற்ற கணித, விஞ்ஞான, ஆரம்பக்கல்வி பயிலுநர் ஆசிரியர்களுக்குரிய முக்கியமான கலந்துரையாடல் ஒன்று இன்று சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இவர்களின் நிரந்தர நியமனம் தொடர்பாக இதில் கலந்தாலோசிகக்கப்படவுள்ளதால் சம்பந்தப்பட்ட அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-246)

## காணாமல் போனோர் குறித்த விசாரணை நேற்று ஆரம்பம்

(தென்மராட்சி)

வடபகுதியில் படையினரால் கைதாகிக் காணாமல் போனோர் பற்றிய விசாரணைகள் நேற்றைய தினம் யாழ்ப்பாணம் மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் ஆரம்பமாகியது.

இவ்விசாரணைகளை மேற் கொள்ளவென கொழும்பில் இருந்து யாழ் மாவட்ட முன்னாள் அரச அதிபர் கலாநிதி தேவநேசன் நேசையா, ஓய்வு பெற்ற திருமலை அரச அதிபர் கமிலஸ் பெர்னாண்டோ, திருமதி. ஜெஸிமா இஸ்மாயில், இணைப்பாளர் இக்பால் ஆகியோர் வருகை தந்திருந்தனர்.

மூன்று நாட்கள் நடைபெறும் இவ்விசாரணையில் 54 பேர் விசாரிக்கப்படுவர் எனவும் இன்றும், நாளையும் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் விசாரணைகள் நடத்தப்படும் எனவும் கண்காணிப்புக்குழுவின் யாழ். மாவட்ட இணைப்பாளர் சந்திரசேகரா தெரிவித்துள்ளார்.(உ-77,43)

## தெங்கு மீள் நடுகை மானியத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

தெங்குப் பயிர்ச் செய்கைச் சபையினால் யாழ்ப்பாணத்தில் புது நடுகை மானியத்திட்டம், மீள்நடுகை மானியத்திட்டம் என்பன இவ்வருடம் மார்ச்மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெ. சத்தியேந்திரா தெரிவித்தார்.

இத்திட்டத்தில் இணைய விரும்புவோர் இதற்கான விண்ணப்பப் படிவங்களைத் தத்தம் கமநல கேந்திர நிலையத்தில் அமைந்திருக்கும் தெங்கு அபிவிருத்திச்சபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் திட்டம் பெருந்தோட்டத் துறை அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்லவின் பணிப்புரையில் இடம் பெறுவது குறிப்பிடத்தக்கதாகும். (உ-19)

## இன்று ஒரு தகவல்

# உத்தவ கீதை உபதேசம்

அர்ச்சுனன் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் பகவான் கண்ணன் பதில் சொன்னார். அதற்குப் பெயர் பகவத்கீதை. அதே மாதிரி உத்தவன் கேட்ட கேள்விகளுக்கும் அவர் பதில் சொல்லியிருக்கிறார் அதற்குப் பெயர் உத்தவ கீதை. அதுசரி... உத்தவன் யார்? கண்ணனுக்குச் சிறுவயதிலேயிருந்தே தேரோட்டிக் கொண்டிருந்தவன் அவன் தானே. குருஷேத்திரப் போர் முடிந்தது. அதர்மத்தை அழித்துத் தர்மத்தை நிலைநாட்டி, தருமனுக்கு முடிசூட்டினார் கண்ணபிரான். அதன் பினனர் துவாரகைக்குத் திரும்பினார். தான் வந்த காரியம முடிந்தது. அதனால் இளமையிலிருந்தே தனக்குத் தேரோட்டியாக இருந்து வந்த உத்தவனைக் கூப்பிட்டார். 'உனக்கு வேண்டும என்பவற்றைக் கேள்' என்றார்.

அவன் தனக்கென்று எதையும கேட்க ஆசைப்படவில்லை...! இருந்தாலும் கேள்வி கேட்பதிலே அவன கெட்டிக்காரன். அதனால் கேட்க ஆரம்பித்தான் ''பரந்தாமா! இராசசூய யாகத்துக்குத் தருமனைக கூப்பிட்டு தன் அரண்மனையிலே விருந்து வைத்தான் துரியோதனன். அதன் பின்னர் சூதாட்டத்திற்குக் கூப்பிட்டான். தருமனைத தோல்வியடையப் பண்ணிவிட்டான்.

நீங்கள் தான் முக்காலம் உணர்ந்தவராச்சே... சூதாட்டத்திலே தருமர் ஜெயிக்கிறமாதிரிப் பண்ணியிருக்கக் கூடாதா? பகடைக்காயை உருட்டுகிறபொழுது நீங்கள் எதிர்பார்த்தது விழுகிறமாதிரிப் பண்ணியிருக்கலாமே! சரி... அதுதான் இல்லை... வேடிக்கையைப பார்த்துக்கொண்டிருந்த பீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் இவர்களைப் பணயம வைத்து ஆடுகிறபொழுதாவது காப்பாற்றியிருக்கலாம். அதையும் நீங்கள செய்யவில்லை! பாவம்... அந்த அபலைப் பெண்! ஒன்றுமறியாத உன் சகோதரி... திரௌபதி! அவள் அதிர்ஷ்டக்காரி! அவளைப்பணயம் வைத்து ஆடு... ஜெயித்துவிட்டால் இழந்த நாடு, நகரங்களையெல்லாம் திருப்பிக் கொடுத்துவிடுகிறேன்!" என்றான் துரியோதனன். அந்தச் சமயத்திலே யாவது பாண்டவர்களுக்கு வெற்றி கிடைக்கிற மாதிரிச் செய்திருக்கக் கூடாதா? அப்போதெல்லாம் சும்மா இருந்து விட்டு அந்தப் பெண்ணைத் துச்சாதனன் இழுத்துக் கொண்டுவந்து துகில் உரிகிற கட்டத்திலே காப்பாற்றினாயே... இது நியாயமா? முறையா? அறமா?" இவைதான் உத்தவன் கேட்ட கேள்வி.

இதற்குப் பரந்தாமன் பதில் சொல்கிறார். ''அப்படிக்கேள் உத்தவா! தருமனைத் துரியோதனன் சூதாட அழைக்கும் போது என்ன சொன்னான்? நான் பணயம் வைக்கிறேன். எனக்குப் பதிலாக என் மாமன் சகுனி பகடைக் காய்களை உருட்டுவான் என்று சொன்னான். உடனே தருமன் என்ன சொல்லியிருக்கலாம்? எனக்குப் பதிலாக என் மைத்துனன் கண்ணன் பகடைக்காய்களை உருட்டுவான் என்று சொல்லியிருக்கலாமே? அப்படிச் சொல்லவில்லை.

என்ன செய்தான தெரியுமா? துரியோதனனுடன் சூதாட்டத்துக்குச் சம்மதித்துவிட்டோம். கடவுளே! இது என்மைத்துனன் கண்ணபிரானுக்குத் தெரியக்கூடாது என்று வேண்டிக் கொண்டான், இதனால் தருமன் எனக்கு மனத்தால் தடைபோட்டுவிட்டான். அதனால் அரண்மனைக்கு வெளியிலேயே என்னைக் கூப்பிடுவார்களென்று காத்துக் கொண்டிருந்தேன். பீமன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன், திரௌபதி ஆகியவர்களைப் பணயம் வைத்து ஆடுகிற போதாவது கூப்பிடுவார்கள் என்று பார்த்தேன். அப்பொழுதும அவர்கள் என்னை நினைக்கவில்லை.

திரௌபதியைத் துச்சாதனன் கூந்தலைப்பிடித்து இழுக்கிறான்... அப்போது கூட அவள் தன்னுடைய உடல் பலத்தால் தடுக்க முயற்சி பண்ணினாளே தவிர என்னை நினைக்கவில்லை! துரியோதனன் சபைக்கு இழுத்துச்செல்லப்பட்ட திரௌபதி, அறநூல்கள்ளயும், அரச நீதியையும் சொல்லிக் கெண்டிருந்தாளே தவிர என்னை நினைக்கவில்லை! துகில் உரிகிற கட்டத்திலேதான் ''ஹரி...ஹரி.. கண்ணா! பரந்தாமா!" என்று கூப்பிட்டாள். அதனால் தான் அப்போது போய் நான் காப்பாற்றினே'' என்றான் பரந்தாமன்.

'அப்படியென்றால் நீ அழைத்தால்தான் போவாயா? நீயாகப் போகமாட்டாயா?' என்று கேட்டான் உத்தவன். 'ஆமாம்! நான் அழைத்தால்தான் போவேன். மனிதர்கள் செய்யக் கூடிய செயல்களையெல்லாம் அவரவர்கள் போக்கிலேயே விட்டுவிட்டுப் பார்த்துக் கொண்டிருப்பேன். நான் குறுக்கிட்டு ஒன்றும செய்யமாட்டேன்' என்றான் பரந்தாமன்.

'மனிதன் தவறு செய்தால் திருத்த மாட்டாயா? சும்மா பார்த்துக் கொண்டுதான் இருப்பாயா?என்று கேட்டான் உத்தவன்.

'நான் மனிதனுடைய உள்ளத்திலே இருக்கிற பொழுது என் எதிரில் மனிதன் தவறு செய்யமாட்டான்' என்றான் கண்ணன்.

'யார் நினைக்கிறார்களோ அவர்களின் உள்ளங்களிலெல்லாம் அவன் இருக்கிறான்... அப்படியிருக்கிறபோது தவறு செய்ய மனிதன் அஞ்சுவான்' இதுதான் உத்தவ கீதை.

இந்தக் காலத்திலும் சிலர் பகவான் மாதிரி மற்றவர்கள் கஷ்டப்படுவதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது உண்டு. அன்றொருநாள் அப்படித்தான் சார்... நடுதெருவில் ஒரு திருடனைப் பிடித்து எல்லாரும் சேர்ந்து அடித்துக் கொண்டிருக்கிறார்கள்... ஒரு ஆள் மட்டும் தள்ளி நின்று அதை வேடிக்கை பார்த்துச் சிரித்துக் கொண்டிருக்கிறான். 'என்ன சார்... இது ...பாவம் அந்த ஆளைப் போட்டு அப்படி அடிக்கிறர்களே!' என்றேன். 'அடிக்கட்டும் சார்... அவன் அடிவாங்க வேண்டிய ஆள்தான்' என்றான் அந்த ஆள்.

'ஏன்சார் அப்படிச் சொல்கிறீர்கள்?' என்றேன். 'பின்னே என்னசார்... நான் ஒருவரின் பையிலேயிருந்த பர்ஸை எடுப்பதற்கு முயற்சி பண்ணிக்கொண்டிருந்தேன் அதற்குள் அவன் முந்திக் கொண்டு அதை அபேஸ் பண்ணிவிட்டானே! பார்ப்பது நான்... எடுப்பது அவனா? என்னசார் நியாயம் இது? நன்றாக வாங்கட்டும்' என்கின்றான்.

பரந்தாமன் தான் இந்த உலகத்தைக் காப்பாற்ற வேண்டும்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# புலிகள் கொலையாளிகள் என்றால் ஜே.வி.பியினர் புனிதர்களா?

## மங்கள சமரவீரவுக்கு ஆனந்தசங்கரி பதில்



(கோட்டை)

தமிழர் விடுதலைக் கூட்டணியும் அதன் உறுப்பினர்களும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பணயக் கைதிகளாக மாறிவிட்டார்கள் அல்லது மாறிவருகிறார்கள் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பிரசாரப் பொறுப்பாளர் திரு மங்கள சமரவீர கூறியிருப்பதை தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர் திரு வி. ஆனந்தசங்கரி எம்.பி கடுமையாகச் சாடியுள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் அவர் கூறியிருப்பதாவது.

### பாதை மாறவில்லை

எமது கட்சி சுமார் 30ஆண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பட்டது. இதுவரை நாங்கள் எமது பாதையிலிருந்து தவறவில்ல. எமது தனித்துவத்தைப் பேணி வந்திருக்கின்றோம். மற்றவர்களைப் போன்று எமக்கு அதிகார ஆசையும் கிடையாது.

எமது பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வினை நாங்கள் விரும்புகின்றோம்.

தமிழர் தேசிய கூட்டமைப்பானது எமது சொந்த முயற்சியில் உருவானது. எவரது கையாட்களாகவும் செயல்ப்படுவதற்காகவென்று எமது பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் ஒரு தீர்வினைக் காண்பதற்காக தம்மைப் பலப்படுத்திக்கொள்ளவே இது உருவாக்கப்பட்டது.

பொதுஜன ஐக்கிய முன்னணி பதவியிலிருந்த பொழுது அக்கட்சிக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றில் கைச்சாத்திடாமைக்காக நாங்கள் குற்றங் காணப்பட்டோம். பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு வால்பிடிப்பதாக நாங்கள் ஏளனம் செய்யப்பட்டோம்.

தமிழர் விடுதலைக் கூட்டணி தனது அடையாளத்தை மாற்றிக் கொள்ளும் வகையில் எதனையும் செய்யாது என்பதையும் எவரது பொம்மையாகவும் அது செயல்பட மாட்டாது என்பதையும் பலமாகவும் தெளிவாகவும் கூறிவைக்க விரும்புகின்றோம்.

### ஆதரிப்பதற்குக் காரணம்

உண்மையைக் கூற நாம் தயங்கப் போவதில்லை. ஐக்கிய தேசிய முன் னணியை நாம் ஆதரிப்பதற்குப் பலமான காரணங்கள் இருக்கின்றன.

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கியமை, நாட்டில் எல்லாவிடங்களிலும் சோதனைச்சாவடிகளை இல்லாமல் செய்தமை, கொழும்புக்கு வருகிறவர்களைப் பதிவு செய்வதை நீக்கியமை, புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தமை போன்றவை இதற்கான சில அதாரங்களாகும். திரு. மங்கள சமரவீர கூறுவது போல் கண்ணை மூடிக்கொண்டு நாம் அரசை ஆதரிக்கவில்லை தமிழீழ விடுதலைப் புலிகளை ஜே.வி.பியுடன் ஒப்பிடுவதானது அர்த்தமற்றது. சில ஒற்றுமைகள் இருக்கலாம். ஆனால் வேறுபாடுகள் ஏராளமாகும்.

அரசாங்கம் புலிகளுடன் பேசத் தொடங்கியுள்ளது. 2001டிசம்பருக்குப் பின் கிராமங்களில் அழுகையும், ஒப்பாரியும் நின்றுவிட்டது. பல பில்லியன் பெறுமதியான பணம் மிச்சப்படுத்தப்பட்டுள்ளது. எல்லாவற்றுக்கும் மேலாக புலிகள் தமது சரித்திரத்தில் முதல் தடவையாக தமிழரின் பிரச்சினைக்குச் சஷ்டிமுறையிலான ஒரு தீர்வினை ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ள இணங்கியுள்ளார்கள்.

புலிகளைக் கொலையாளிகள் என்று வர்ணிப்பதன் மூலம் ஏனைய கொலையாளிகள் புனிதர்களாகிவிடமுடியாது அதிகாரத்தில் உள்ள ஆசையில் பழையவைகளை மறந்து முட்டாள்த்தனமாக நடந்து கொள்ளக் கூடாது. தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் பொது ஜன ஐக்கிய முன்னணிக்குமிடையில் பல சமயங்களில் பேச்சுவார்தைகள் நடைபெற்றதுண்டு. கவனமாக இருங்கள் தற்கொலையான நடவடிக் கைகளை எடுத்துவிடாதீர்கள் என்று மாத்திரமே அவர்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

பொது ஜன ஐக்கிய முன்னணிக்கு குறிப்பாக திரு. மங்கள சமரவீரவுக்கு நான் பணிவாக விடுக்கும் கோரிக்கை என்ன வென்றால, கனவுலகத்திலிருந்து வெளியில் வந்து இனப்பிரச்சினைக்கு விரைவாகவும் நிலைத்து நிற்கக்கூடியதுமான ஒரு தீர்வினைக் காணும் படி சம்பந்தப்பட்ட தீரப்பினரை வற்புறுத்துவதுடன் அந்த முயற்சிக்கு ஆதரவளியுங்கள் என்பதேஆகும்.

புலிகளே தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டுள்ள நிலையில் நாடு துண்டாடப் படுவதிலிருந்து பாதுகாக்கவே ஜே.வி.பி யுடன் கூட்டணி அமைக்கப் போவதாக மங்கள கூறுவது கேலிக்கூத்தாகும். (பி)

## இராசி பலன்

**25. 01. 2003**

**(தை 11, சனி)**

| | |
|---|---|
| அட்டமி | பி.ப 2.51வரை |
| சித்திரை | மு.ப 8.36வரை |
| இராகுகாலம் | 9.36-11.06 |
| சுபநேரம் | 3.36 - 5.06 |

அட்டமி நவமி

**மேடம்**
நல்ல வரவேற்பு, குடும்ப மகிழ்ச்சி, காரிய அனுகூலம், தனவரவு.

**இடபம்**
காரிய சாதனை, இனிய சம்பவம், தேக ஆரோக்கியம், சத்துருஜெயம்.

**மிதுனம்**
புத்திரரால் கவலை, இலட்சுமிகரம், முயற்சி தாமதம், சிறுவியாதி.

**கடகம்**
மனச்சோர்வு, மாதாவழி உறவு, அற்பர் நேசம், காரிய தாமதம்.

**சிங்கம்**
வாக்கு மேன்மை, முயற்சி பலிதம் தனவரவு, நல்ல அனுபவம்.

**கன்னி**
தேவையற்ற விவாதம், மாதர் உதவி, வேலைக்கஷ்டம், தனவிரையம்.

**துலாம்**
தெய்வசிந்தனை, சயனசுகம், விருந்து பசாரம், முயற்சி கைகூடும்.

**விருச்சிகம்**
உறவினர் உதவி, முயற்சி பலிதம், அமைதிக் குறைவு, சுபசெலவு.

**தனுசு**
உறவினர் சந்திப்பு, நினைத்த காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை, புகழ்.

**மகரம்**
உற்சாகம், கடினஉழைப்பு, போசனசுகம், நல்ல சம்பவம்,

**கும்பம்**
ஆன்றோரால் மதிக்கப்படுதல், புதியதிட்டமிடல், வயிற்றுவலி, காரிய தாமதம்.

**மீனம்**
பிரயாண பயம், நண்பர்கள் விரோதம், காரியதாமதம், உடல்நலக்குறைவு.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்

# பாடசாலைகளில் சிறு தோட்டப் பயிர்ச் செய்கை

(சுதுமலை)

வடக்கு-கிழக்கு மாகாண பாடசாலைகளில் சிறுதோட்டப் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளில் கல்வித் திணைக்களம் ஈடுபட்டு வருகின்றது.

பாடசாலைச் சூழலில் உள்ள நிலங்களைப் பயன்படுத்தி பயிர்செய்கை பண்ணப்படுவதால், கிடைக்கும் வருமானம் மூலம் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு உதவுவதுடன், விவசாயத்தை ஒரு படமாக்கக் கற்கும் மாணவர்களின் செய்முறைகளுக்கும் இச் சிறுதோட்டம் உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டத்தினை அமுல்படுத்தும் வகையில் கல்வி அமைச்சின் விவசாய தொழில்நுட்பப் பிரிவினால் விசேட பாடத்திட்டம் உருவாக்கப்படவுள்ளது. (உ-252)

# சர்வதேச செ.சங்கம் விடுத்துள்ள விளக்கம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் பிரதிநிதிகள் குழுவொன்று கடந்த 21ஆம் திகதி நெடுந்தீவுக்கு விஜயம் மேற்கொண்டது தொடர்பாக அக்குழு விளக்கமொன்றை பத்திரிகைகளுக்கு விடுத்துள்ளது அது வருமாறு,

21.01.2003 அன்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினரால் நெடுந்தீவிற்கு மேற்கொள்ளப்பட்ட விஜயமானது சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தைப் பற்றிய பரப்புரை அமர்வுகள் இரண்டினை நடாத்துவதற்காகவே பொலிஸார், கடற்படை அதிகாரிகள் மற்றும் சிப்பாய்களுக்கு இப்பரப்புரை நடாத்தப்பட்டது.

ஜெனீவா ஒப்பந்தங்கள் மற்றும் ஸ்ரீலங்கா அரசாங்கத்தால் 1959ல் கையொப்பமிடப்பட்ட இச் சர்வதேச உடன்படிக்கைளுள் அடங்கும் கட்டுப்பாட்டு விதிகளை மதித்தல் தொடர்பாக பரந்த விளக்கம் சிங்கள மொழியில் பரப்புரை அதிகாரி ஒருவரால் கொடுக்கப்பட்டது என்று அவ்விளக்கம் கூறுகின்றது. (பி)

# கண்காணிப்புக் குழு புலிகள் சந்திப்பு

(கொழும்பு)

அம்பாறை மாவட்ட கண்காணிப்புக் குழுத்தலைவர் ஹவுல்யுலிசனும் அம்மாவட்ட தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்களும் எதிர்வரும் 27ஆம் திகதி திங்கட்கிழமை சந்தித்துப் பேச்சுவார்த்தை ஒன்றை நடத்தவுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தின் சில பகுதிகளில் உள்ள முஸ்லிம் வர்த்தகர்களிடம் தமிழீழ விடுதலைப் புலிகள் வரி அறவிடுவதாகக் கூறப்படுவது தொடர்பாகவே பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளது. (உ-8)

நன்றாற்ற லுள்ளுந் தவறுண்டு அவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை
–குறள்–

# வலம்புரி.

## மாணவர் அட்மிஷன்

ஒரு பெண்ணைத் திருமணம் செய்து வைப்பதும், பிரபல்யமான பாடசாலைகளில் மாணவர்களுக்கு அட்மிஷன் எடுப்பதும் ஒரே மாதிரியான பிரச்சினையாகவுள்ளது.மாணவர்களின் அட்மிஷன் விவகாரம் வீடுகளில் பெரும் களேபரத்தையே ஏற்படுத்தி விடுகிறது. 5ம் தரப் புலமைப் பரீட்சையில் சித்தியடைந்தால் மட்டும் பிரபல்யமான பாடசாலைகளில் அனுமதி கிடைத்துவிடுமெனக கூற முடியாது.குறிபபாக யாழ்ப்பாணத்தில் உள்ள தேசிய பாடசாலைகள் தம்மிடம் உள்ள ஆளணி மற்றும் பௌதிக வளங்களை அடிப்படையாகக் கொண்டு தமது சக்திக்கேற்றவாறு ஆறாம ஆண்டில் மாணவர்களை அனுமதிப்பதற்காக புலமைப் பரீட்சைப் புள்ளிகளுக்கு மேலாக தாம்ஒரு வெட்டுப் புள்ளியை அறிவிக்கின்றனர்.இவ் வெட்டுப் புள்ளியானது பரீட்சைத் திணைக்களத்தினால் மாவட்ட ரீதியில் அறிவிக்கப்பட்ட புலமைப் பரீட்சைச் சித்திப் புள்ளியை விடக் கூடுதலாகவேயுளளது. இதனால் புலமைப் பரீட்சையில் சித்தியடைந்தாலும் தேசிய பாடசாலைகளில் அனுமதி எடுக்க முடியாதென்ற நிலைமை ஏற்படடுளளது.இதன் காரணமாக பெற்றோர்களுக்கும்,பாடசாலை நிர்வாகங்களுக்கும் இடையே குழப்பமேற்படுகின்றது.

இவை ஒரு புறம்,மறுபுறத்தில் புலமைப் பரீட்சையில் சித்தியடைந்த அல்லது சித்திப் புள்ளிக்கு அண்மித்த புளளிகளைப் பெற்ற மாணவர்களை விடுவிப்பதில் பல பாடசாலைகள் மறுப்புத் தெரிவித்து வருகின்றன.

எமது ஆசிரியர்களின் கடின உழைப்பால் புலமைப் பரீடசையில் சித்தியடைந்தவர்கள் தாம்கற்ற பாடசாலையை உதறி விட்டு பிரபல்யமான பாடசாலைகளுக்குச் சென்றால்,நாம் என்ன செய்வது என்பது குறித்த பாடசாலை நிர்வாகங்களின் நியாயமான கேள்வி.

இவ்வகையில் யாழ்ப்பாணதகில் இன்று பெரும் பிரச்சினையாக இருப்பது பிள்ளைகளின் பாடசாலை அனுமதியாகும்.

இத்தகைய பிரச்சினைகளை கல்விச் சமூகம் வெறுமனே பார்த்துக் கொண்டிருககுமாயின் அதனால் மாணவர்களே பாதிப்படைவர். எனவே இது விடயத்தில் ஓர் கனதியான முடிவை கல்விச் சமூகம் எடுக்க வேண்டும். இதற்காக கிராமங்களில் உள்ள பாடசாலைகளின் தரத்தை,அவற்றின் வளஙகளை உயர்த்த கல்வித் திணைக்கள நிர்வாகம் முன்வர வேண்டும்.பாடசாலைகளின் வளங்களும், திறன்களும் பரவலாக்கப்படுமாக இருந்தால் அட்மிஷன் என்பது பிரச்சினையாக இருக்காது.

# ஜேர்மன் ஹவ்ஸ்பேக் கலைக்குழுவினர் இணைந்து வழங்கிய இரு நாடகங்கள்

யாழ். திருமறைக் கலாமன்றத்தினரின் ஏற்பாட்டில், புதிய ஆண்டில் ஜேர்மனிய ஹவ்ஸ்பேக் நாடகக் குழுவினருடன் இணைந்து அண்மையில் (10-01-2003) யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இனிய கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

மேற்படி நிகழ்வில் பெருந்தொகையானவர்கள் கலந்து சிறப்பித்தனர்!. ஆரம்ப நிகழ்வாக மெழுகுவர்திகளை ஏந்திய வண்ணம் ஆங்கில வரவேற்புப் பாடல்களை இசைத்தனர். ஹவ்ஸ்பேக் குழுவினர், தொடர்ந்து தமிழ்க் கலாசார விழுமியங்

### திறனாய்வுகளம்

களுடன் கட்டியக்காரனால் வரவேற்புக்கட்டியம் நிகழ்த்தப்பட்டது, கீழைத்தேய நடனமும் மேலைத்தேய நடனமும் இணைந்து பார்போரை மகிழ்வித்தன.

**கண்ணுக்குத் தெரியாத சுவர்கள்**

தமிழ் மற்றும் ஜேர்மனியக் கலைஞர்களின் ஒன்றிணைவில் “கண்ணுக்குத் தெரியாத சுவர்கள் என்னும் மௌனநாடகம் பல்லினமக்களிற்கிடையிலான ஒற்றுமை புரிந்துணர்வுடன் கூடிய விட்டுக்கொடுப்பு ஆகியவற்றை கலாசாரங்களின் விழுமியங்களுடன் கடந்த கால யுத்தத்தின் கொடூரத்தையும், தற்கால சமாதான சுபீட்சத்தின் திறவு கோலையும் மௌனங்களால் மொழி பெயர்கக்பட்டது, திருமறைக்கலா மன்றத்தின் நாடகங்களான ஆசோகா, தர்ஷனா போன்ற நாடகங்களின் பாணியில் இருந்தாலும் கூட புதிய ஒரு தளத்தை நோக்கி புதுமையாய் நிகழ்த்தப்பட்டது.

**கனவுப் பெட்டகம்**

லாண்ட வோல்க் தியேட்டர், ஹவ்ஸ்பேக் கலைக் குழுவினர் (ஜேர்மன்) வழங்கிய கனவுப் பெட்டகம் என்னும் நிகழ்ச்சி பலரும் இதுவரை கண்டிராத புதுமையான ஒரு நிகழ்வாக அமைந்தது மட்டுமல்லாமல், திரையில் பார்ப்பது போன்றும் மாயா ஜாலம் பார்ப்பது போன்ற உணர்வுகளைப்பார்வையாளர்களிற்கு எழுப்பியது! காரணம் காட்சிகளின் விரைவும் அழகியல் தன்மைகளும் தான்.

ஒருவிதமான “றேடியற் வைற்” மூலம் இருளான இடங்களில் வெண்மையானவை மட்டுமே, கண்ணுக்குத் தெரியும் வகையில் ஓர் உத்தியாகவும் அமைந்திருந்தது, நகைச்சுவைத் தன்மையுடன் பார்ப்போரை புன்னகை கொள்ளவைத்தாலும், ஜேர்மனிய கலைவடிவங்கள் சிலவற்றை நிகழ்ச்சியில் சேர்த்திருப்பின், பார்வையாளர்களை அதிகம் திருப்திப்படுத்தியிருக்கும். சமாதானத்திற்கான பாதைகள் திறக்கப்பட்டிருக்கும் நாட்களில் வெளிநாட்டவர்களுடனான உறவுப்பாலம் சமாதானச் செயற்பாடுகளிற்கு கருக்கட்டும் முயற்சி எனலாம். இது போன்ற உறவுகள் சங்கமிக்கும் கலை நிகழ்வுகளால் சமாதானம் என்னும் பிரசவத்தை விரைவில் எட்டிவிட முடியும் என்பது திண்ணம்.

**ஜோ. ஜெஸ்ரின்**
**கொழும்புத்துறை.**

## ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டம் எதிர்வரும் 27ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப 10 மணிக்கு பிரதேச செயலர் க. கேதீஸ்வரன் தலைமையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (உ - 77)

## பெருவெற்றி

(கொழும்பு)

சிவனொளிபாதமலை நீரேந்துப் பகுதிகளில் அறிமுகப் படுத்தப்பட்ட பொலித்தீன் பாவிப்புத் தடை 80 வீதம் வெற்றி அளித்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (உ)

# 6ஆம் சுற்றுப் பேச்சுக்கு முன் பாலசிங்கம் வன்னி விஜயம்

### நோர்வே தூதரகம் தகவல்

(கொழும்பு)

கடுமையான வெள்ளமும் தொற்று நோய்களினாலும் பாதிக்கப்படக் கூடிய அபாயமுமே விடுதலைப் புலிகளின் தலைமையகத்துடன் கலந்தாலோசிக்க கலாநிதி அன்ரன் பாலசிங்கம் வன்னி விஜயம் செய்வதை கடந்த இரு மாதங்களாகத் தடுத்தன.

எனினும் இவர் மார்ச் மாத நடுப்பகுதியில் வன்னி வரத்திட்டமிடப்பட்டுள்ளது.

கொழும்பில் உள்ள நோர்வேத் தூதரகம் விடுத்துள்ள அண்மைசெய்திக் குறிப்பில் இவ்விதம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக் குறிப்பில் மேலும்,

கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் உடல் நலம் மீது உள்ள அக்கறை காரணமாகவே ஐந்தாம் சுற்று பேச்சுவார்த்தையை முன்னர் திட்டமிட்டவாறு தாய்லாந்தில் நடத்தாது ஐரோப்பிய நாடொன்றுக்கு மாற்றப்படவுள்ளது.

பெப்ரவரி 7, 8 ஆம் திகதிகளில் ஐரோப்பிய நாடொன்றில் பேச்சுவார்த்தைகளை நடத்த அரசும் புலிகளும் இணக்கம் கண்டுள்ளனர்.

பாலசிங்கம் லண்டனில் உள்ள தனது வாசஸ்தலத்தில் இருந்து பேச்சுக்கள் நடைபெறும் இடத்துக்குப் ப்யணம் செய்வார்.

ஜப்பானில் நடைபெறவிருக்கும் ஆறாம்சுற்று பேச்சுவார்த்தைகளுக்கு முன்னதாக மார்ச் மாத நடுப்பகுதியில் வன்னிக்கு விஜயம் செய்ய பாலசிங்கம் திட்டமிட்டுள்ளார்.

சர்வதேச மன்னிப்புச் சபையின் முன்னாள் தலைவர் இயன் மார்டின், வள அதிகாரியாகப் பங்கேற்கும் ஐந்தாம் சுற்றுப் பேச்சில் உடனடி மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கான தற்போதைய முயற்சி கள், மனித உரிமைகள் தொடர்பான விடயங்களுக்கு இருதரப்பினரும் முக்கியத்துவம் கொடுத்து ஆராய்வர் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

# நாட்டை விட்டு இந்தியத் தூதுவரை விரட்ட வேண்டும்

### தில்லைக்கூத்தன் கோரிக்கை

(கொழும்பு)

சமாதான முயற்சிகள் முன்னெடுத்துச் செல்லப்படும் இவ்வேளையில், வடக்குக் கிழக்குப் பகுதிகளில் உள்ள பௌத்த மதச் சுவடிகளைத் தேடும் பணியில் பணத்தைச் செலவு செய்யவுள்ள இந்தியா, வன்னிப் பகுதியில் வறுமையில் வாடிய ஒரு குழந்தைக்குத் தேவையான ஒரு துளி பால்மாவிற்குப் பணம் கொடுத்ததா?

தமிழர் தேசிய பணிக்குழுவின் தலைவரும், அகில இலங்கைத்தமிழ்க் காங்கிரஸின் உபதலைவருமான தில்லைக்கூத்தன் விடுத்துள்ள அறிக்கையொன்றில் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

அந்த அறிக்கையில் தில்லைக்கூத்தன் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது.

அரசும், விடுதலைப்புலிகளும் சமாதான முயற்சிகளை மேற்கொண்டுவரும் இவ்வேளையில் வடக்குக் கிழக்கில் உள்ள பௌத்த ஆலயங்கள், சுவடிகளைத் தேடிக் கண்டுபிடிக்கும் பணிக்கு இந்திய அரசு பெருந்தொகைப் பணத்தைச் செலவழித்துள்ளது. இது சமாதான முயற்சிகளைக் குழப்பும் நோக்கத்திலானது இந்தியத்தூதுவர் உடனடியாக இந்த நாட்டைவிட்டு வெளியேற்றப் படவேண்டும் என்று அரசை கோரியுள்ளார். (ம)

# பொலிஸ் ஆணைக்குழுவுக்கு எதிராக மனித உரிமைமீறல் மனுக்கள்

(கொழும்பு)

பொலிஸ் ஆணைக்குழுவுக்கு எதிராக முதல்தடவையாக அடிப்படை மனித உரிமை மீறல் தொடர்பாக 4 மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

பொலிஸ் ஆணைக்குழுவினால் அண்மையில் நியமிக்கப்பட்ட 7 பிரதிப் பொலிஸ்மா அதிபர் பதவிகள் தொடர்பாக, இவ் மனுககள தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

பொலிஸ் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பதவிகள் நியாயமற்றவை என்பதனால் தங்கள் அடிப்படை மனித உரிமை மீறப்பட்டுள்ளதாக மனுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆர். எம் வீரக்கோன உட்பட நான்கு பொலிஸ் அத்தியட்சகர் களால்,

உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க, அமைச்சின் செயாலாளர் எம். என் யுனைட், பொலிஸ்மா அதிபர் ரி.ஈ. ஆனந்தராஜா, பொலிஸ் ஆணைக்குழு மற்றும் அதன் உறுப்பினர்கள் அகியோருக்கு எதிராக இம் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. (உ-8)

## தினசரி தியானம்

### வெற்றி

எளிமையான வாழ்க்கை நடத்து. உன் எண்ணங்கள் எல்லாம் உயர்ந்ததாக இருக்கட்டடும். இறைவனுக்கு அஞ்சு, உண்மையே பேசு. எல்லோரையும் நேசி. எல்லாவற்றிலும் உண்னையே காண். உன் காரியங்களில் எல்லாம் நேர்மையாக இரு. நீ உன் வாழ்க்கையில் வெற்றி பெறுவாய் உனக்குத் தெய்வ தரிசனம் கிட்டும்.

உன்னைத் தபோதனராக மாற்றும் சக்தி உன்னிடமே இருக்கிறது. அறிவைப் பயன்படுத்தி உன்னுள் இருக்கும் சக்தியைத் தட்டிஎழுப்பு வெற்றி அடைவாய்.

**சுவாமி சிவானந்தர்**

# தென்கொரிய வைத்தியர்கள் யாழில் இலவச மருத்துவ சேவை

(யாழ்ப்பாணம்)

தென்கொரியாவில் இருந்து வருகை தரவுள்ள வைத்திய கலாநிதிகள் யாழ்ப்பாணத்தில் இலவச மருத்துவ சேவையை வழங்கவுள்ளனர்.

இந்த வகையில் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் எதிர் வரும் 28,29,30ஆம் திகதிகளில் இவ் வைத்தியர்களின இலவச மருத்துவ சேவை இடம்பெறவுள்ளது.

இவர்களால் இக்காலத்தில் நற்செய்திக் கூட்டங்கள் நடத்த்ப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (உ)

# மத்திய வங்கிக்கு எதிரான வழக்கு விசாரணை 24 இல்

(கொழும்பு)

பிரமுகவங்கி மூடப்பட்டதற்கு எதிராக அதன் வாடிக்கையாளர்களால் தாக்கல் செய்யப்பட்ட மனு, அடுத்தமாதம் 24ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

வங்கியின் வாடிக்கையாளர்கள் மூன்றுபேர் கடந்த மாத இறுதியில் மேல் முறையீட்டு நதிமன்றத்தில் இவ் வழக்கைத் தாக்கல் செய்திருந்தனர்.

இவ்வழக்கு விசாரணை தொடர்பாக ஆட்சேபமனுக்களை சமர்ப்பிக்க விரும்பினால், அவற்றை அன்றைய தினத்தில் முன் வைக்குமாறு நீதிமன்றம் மத்தியவங்கிக்கு உத்தர விட்டுள்ளது.

விசாரணைகள் பூர்த்தியடையும் வரை வங்கியின் சொத்துகள் யாவும் விற்பனை செய்யப்பட்ட மாட்டாது என மத்திய வங்கி சார்பாக அஜராகவுள்ள சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வங்கியின் வைப்புக்களை வேறு வங்கிகளுக்கு மாற்றுமாறு உள்ளூர் வர்த்த கர்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

# ஆறு அமைச்சர்கள் நேற்று

## ஜனாதிபதி முன் பதவியேற்பு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏழு பேர், நேற்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா முன்னிலையில் . சத்யப் பிரமாணம் செய்து அமைச்சர்களாக பதவியேற்றுக் கொண்டனர்.

ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற இப் பதவியேற்பு வைபவத்தில், ஆறு அமைச்சரவை அந்தஸ்தில்லாத அமைச்சர்களும், ஒரு பிரதியமைச்சரும் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர்.

அமைச்சர்களும் அவர்களின் துறைகளும் வருமாறு.

❋ ரஞ்சித் மத்துமபண்டார- சுற்றுலாத்துறை அமைச்சர்

❋ ஹேமகுமார நாணயக்கார- விவசாய தொழில்நுட்ப பயிர்ச் செய்கை அமைச்சர்.

❋ வீ.எம்.பண்டாரநாயக்க-நெற் செய்கைத்துறை அமைச்சர்.

❋ லக்ஸ்மன் யாப்பா அபயவர்த்தன-வெளிநாட்டில் வேலை பார்ப்போர் சேமநலன் நடவடிக்கை அமைச்சர்.

❋ லக்கி ஜெயவர்த்தன- காணி உறுதிப்பதிவு அமைச்சர்.

❋ ஹகலிய ரம்புக்வெல - விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர்.

❋ ஜயசுந்தர விஜயக்கோன் - வர்த்தக நுகர்வோர் விவகார பிரதியமைச்சர். (இ)

# அரசுக்கு எதிராக "ஜனகோஷம்"

## எதிர்க் கட்சிகள் நடத்த முடிவு

(கொழும்பு)

உயர்ந்து வரும் வாழ்க்கைச் செலவு,பொதுச்சொத்துக்களைத் தனி யார் மயமாக்குதல்,தொழில் சட்டங்களில் திருத்தம் என்பவற்றிற்கெதிரான தீவிர ஆர்ப்பாட்டம் ஒன்று எதிர்க் கட்சிகளின் கூட்டினால் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

''ஜனகோஷம்'' எனப் பெயரிடப்பட்டிருக்கும் இந்த ஆர்ப்பாட்டம் அடுத்த மாதம் 18ம் திகதியன்று நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது என்று எதிர்க் கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். அன்றைய தினம் நண்பகல் 12.30க்கு தொழிலாளர்கள் வேலைகளை நிறுத்திக் கொண்டு,உரத்த சத்தத்தில் கோஷங்களை எழுப்புதல் வேண்டும். ஐ.தே.க எதிர்க் கட்சியாக இருந்த காலத்தில் செய்தது போன்று இதுவும் இருக்கும் என்று தெரிவிக்கப் படுகிறது.

லங்கா சமசமாஜக் கட்சி கம்யூஸ்ட் கட்சி,ஜே.வி.பிமற்றும் முக்கிய தொழிற் சங்கங்கள் இந்த ''ஜன கோஷ'' ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளதாகவும் அடுத்த மாதத்தில் பல ஆர்ப்பாட்டங்கள் நடை பெறவுள்ளதாகவும் ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.

இது பற்றி சமஷமாசக் கட்சியின் திஸ்ஸ விதாரண, கம்யூனிஸ்ட் கட்சியின் ராஜா கொலுரே ஆகியோர் கருத்து தெரிவிக்கையில் வாழ்க்கைச் செலவு உயர்வு விடயத்தில் அரசாங்கம் மக்களை ஏமாற்றி விட்டது எனத் தெரிவித்தனர். (இ)

### கிராம சேவகர்களுக்கு பதவி உயர்வு

(யாழ்ப்பாணம்)

15 வருடகால சேவையை பூர்த்தி செய்த யாழ்மாவட்ட கிராம உத்தியோகத்தர்கள் அனைவரும் முதலாம் தர உத்தியோகத்தர்களாக பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். (இ)

### அரசைக் கவிழ்க்க....

நகரசபைகள் ஆகியவற்றின் முஸ்லிம் அங்கத்தவர்களை ஒன்றிணைத்து எதிரணியினரின் சதி முயற்சிகளுக்கெதிராகப் போராட்டம் நடத்துவதற்கு அமைச்சர் ரவூப் ஹக்கீம் நடவடிக்கைஎடுத்து வருகின்றார்.

இதனை அடுத்து இரண்டாம் கட்ட எதிர்ப்பு நடவடிக்கையாக சகல முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களையும் ஒன்று சேர்த்து போராடவும் முஸ்லிம் காங்கிரஸ் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசு மீது முஸ்லிம் காங்கிரஸ் வைத்துள்ள நம்பிக்கையை குலைப்பதற்குச் சில தீய சக்திகள் முயன்று வருகின்றன. ஆனால் இதில் அவர்கள் வெற்றிபெற மாட்டார்கள் என்றும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதே வேளை, எரிபொருள் மின்சக்தி அமைச்சர் கருஜயசூரியாவின் மேல் கொத்மலை நீர்மின்சாரத் திட்டத்தினால், போர்க் கொடி தாங்கியுள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமானும், பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவிடம் தனது எதிர்ப்பைக் காட்டி வந்துள்ளார்.

அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் காட்டிவரும் எதிர்ப்பை எதிரணிக் கட்சிகள்தமக்குச்சாதகமாகப் பயன்படுத்தி ஆறுமுகம் தொண்டமான் அரசுக்கு அளித்துவரும் ஆதரவை மீள்பரிசீலனை செய்யப் போவதாக பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவிற்கு அரசியல் நெருக்கடியை ஏற்படுத்தி வருவதினால் ஐக்கிய முன்னணி அரசின் எதிர்காலம் கேள்விக் குறியாகி உள்ளதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(ம)

# அமெ.தூதரகம் முன்பாக

## நேற்று ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

ஈராக் மீது அமெரிக்கா போர் ஒன்றைத் திணிப்பதற்கு முயற்சித்து வருவதைக் கண்டித்து புதிய இடதுசாரி முன்னணி நேற்று கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளது.

அமெரிக்கத் தூதரகத்தின் முன் நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தை அடுத்து கண்டன மகஜர் ஒன்றையும் அமெரிக்கத் தூதரக அதிகாரிகளிடம் ஆர்ப்பாட்டக் காரர்கள் கையளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# புலிகளின் பிரதிநிதிகளுடன்

## ஐரோ-குழு பேச்சு நடத்தியது

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் தமிழர் புனர்வுாழ்வுக்கழக மற்றும் அரசியல் துறைப் பொறுப்பாளர்களுடன் பேச்சுக்களை நடத்திய ஐரோப்பிய ஒன்றியத் தூதுக் குழு நேற்றுக் காலை கொழும்பு திரும்பியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் இலஙகைக்கனான தூதுவர் பூட்ஸ் வில்சன்,ஐரோப்பிய ஆணைக் குழுவின் ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அதிகாரி அன்வான் லெமி ஷொன்,தென்னாசியாவுக்கான ஐரோப்பிய ஒன்றிய மனிதாபிமான உதவி அலுவலர் கிறிஸ்ரியன் மன்றா ஆகியோர் தமிழர் புனர்வாழ்வுக் கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் றெஜி,திட்ட ஆலோசகர் லோறன்ஸ் ஆகியோருடன் புனர்வாழ்வு,புனரமைப்பு விடயங்கள் குறித்து விரிவாக ஆராய்ந்தனர் இக்குழுவினர் புலிகளின் அரசியல் துறைப் பிரதிநிதிகளுடன் நேற்று முன்தினம் பேச்சுக்களை நடத்தியிருந்தனர் (த)

### அதாவுல..

இம் மனு மீதான விசாரணை நேற்று• கொழும்பு மாவட்ட நீதிபதி திருமதி மாலினி குண்ரத்ன முன்னிலையில் நடைபெற்றது. இவ் விசாரணையின் மீது தீர்ப்பளித்த போதே இடைக்காலத் தடையுத்தரவு ஜனவரி 31 வரை நீடிக்கப்பட்டது.

அதாவுல குழுவினர் அக்கரைப்பற்றில் நடத்தியிருந்த பேராளர் மாநாடு செல்லுபடியற்றது எனத் தீர்ப்பளிக்குமாறும் ரவூப் ஹக்கீம் தனது மனுவில் கேட்டிருந்தார். இது தொடர்பான விசாரணை இம் மாதம் 31ம் திகதி நடைபெறவுள்ளது.

அமைச்சர் ரவூப் ஹக்கீம் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி இக்ரம் அஹமத், சட்டத்தரணி நிசாம் காரியப்பர் ஆகியோரும், எதிர் மனுதாரர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி நிஹால் ஜெயமன்ன, விஜயதாஸ ராஜபக்ஸ ஆகியோரும் ஆஜராகியிருந்தனர். (இ)

### பாராளுமன்ற...

சமர்ப்பிக்கவுள்ளனர்.

தறபோது இலங்கையில் காணப்படும் இனமுரணபாடுகளைப் போக்குவதற்கு அந் நாடுகளில் காணப்படும் சமஷ்டி அரசியல் அமைப்பு முறை பொருத்தமாக இருப்பதாக குழுவிற்குத் தலைமை தாங்கிச் சென்ற கலாநிதி ஜயலத் ஜயவர்த்தனா ஜெர்மனியில் இருந்தவாறு வலம்புரிக்குத் தெரிவித்துள்ளதுடன் அதனைப் பிரதமரிடம் வலியுறுத்திக் கூறப் போவதாகவும் தெரிவித்துள்ளார். (வ)

### ஈழ அகதிகளை...

இந் நிலையில் ஐரோப்பிய நாடுகளில அரசியல் தஞ்சம் கோரி அகதி அந்தஸ்துக்கு விண்ணப்பம் செய்திருப்ப வர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதற்குரிய வாய்ப்புக்கள தென்படுவதாகவும் ஐரோப்பிய நாடுகளில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வ)

### தேசிய...

சங்கத்தையும் மத குருமார்களையும புத்தி ஜீவிகளையும் கலந்தாலோசனை செய்தல் வேண்டும். நீதித் துறையினதும் பாராளு மன்றத்தினதும், ஜனாதிபதியி னதும் ஒப்புதல் பெறப்பட வேண்டும் என்று ஜனாதிபதியால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2003 பெப்ரவரி 4ம்திகதி இப்போது பயன்படுத்தப்படும் தேசிய கீதத்தை சீ.டீயில் வெளியிடுவதென்றும்,அஷோசியேட்டற்• நியூஸ் பேப்பர்ஸ் நிறுவனம் இதற்கு அனுசரணை வழங்குகின்றதென்றும் தெரிவிக்கும் முறைப்பாடுகள் பல ஜனாதிபதிக்குக் கிடைத்துள்ளதாகவும்,இவ் வாறான முயற்சிகள் . ஏதேனும் எடுக்கப்பட்டிருப்பின் அது பற்றி சம்பந்தப்பட்ட அமைச்சர் தனக்கு தெரிவிக்காதது ஏன்? என்றும் ஜனாதிபதி செயலக அறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது. •(இ)

### ஊர்காவற்...

இடத்திலிருந்து சுமார் ஒரு மைல் சுற்றாடலில் அட்கள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சடலம் காணப்பட்ட இடத்திலிருந்து 300 மீற்றருக்கு அப்பால் சிவப்பு நிறச் சட்டை ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சடலம் விலங்குகளுக்கு இரையாகிய நிலையில் மிகவும் உருக்குலைந்து இனம் காணமுடியாதுள்ளது. (75)

### ஐந்தாம்...

சமஷ்டி ஆட்சி முறை நிலவும் ஜேர்மனியில் இப்பேச்சு வார்த்தை நடைபெறுவது மிகவும் பயனுடையதான செயற்பாடென்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஐந்தாம் சுற்றுப் பேச்சுவார்த்தை ஜேர்மனியில் நடைபெறுமென்று வலம்புரி கடந்த 23ம் திகதி செய்தி வெளியிட்டமை இங்கு குறிப்பிடத் தக்கது. (இ)

MEDICAL CHECK UP
வைத்திய பரிசோதனை
நோய் வருமுன் காப்போம்
திடீர் மரணத்தைத் தவிர்ப்போம்
❋ 40 வயதிற்கு மேற்பட்ட நோய் உள்ள, நோய் அற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐச் செய்வதன் மூலம் நோயற்ற சுகவாழ்வு வாழலாம்.
❋ X-RAY, ECG, சில முக்கிய இரத்தப் பரிசோதனைகள். சிறுநீர்ப்பரிசோதனை.
இலவச வைத்திய ஆலோசனையுடன் கூடிய MEDICAL CHECK UP குறைந்த கட்டணத்தில்! விபரங்களுக்கு நேரில்!
போக்குவரத்து வசதி கருதி
சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்
(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [C/5602]

வலிகாமம் தென் மேற்குப் பிரதேச சபை, மானிப்பாய்
பதிவு செய்த கட்டிட, தளபாட ஒப்பந்தக்காரர்களை புதுப்பித்தல் - 2003
வலி - தென்மேற்குப் பிரதேச சபையில் பதிவு செய்த கட்டிட, தளபாட ஒப்பந்தக்காரர்களை 2003ம் ஆண்டிற்கான பதிவினை 2003.02.05 ஆம் திகதிக்கு முன்னர் ரூபா 500/= ஐ செலுத்தி புதுப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன். இத்திகதிக்குப் பின்னர் ஒப்பந்தம் புதுப்பிக்கப்படமாட்டாது என்பதையும் அறியத்தருகின்றேன்.
பி.விக்டர், செயலாளர், வலி-தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.
வெ.அ.ஜோன்சன், ஜே.பி.யூ.எம் தலைவர், வலி-தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய் C5710

நெஞ்சு நெகிழும் நினைவில்
1ம் ஆண்டு நினைவலைகள்
மண்ணவள் மடியில் 29 . 07 . 1972

விண்ணவள் அடியில் 04 . 02 . 2002
திதி: 25.01.2003
அமரர்
நாகன் - கோபாலகிருஷ்ணன்
ஆண்டுகள் தோறும் எம்மோடு - நீ
இருப்பாய் என்றிருந்தோம் - எமையெல்லாம்
ஆளாத்துயரிலே ஆழ்த்திவிட்டு - நீண்ட
நெடுந்தூரம் சென்றதெங்கே? - அண்ணே!
நெஞ்சுருக உனை நினைக்கும் போதெல்லாம் - உன்
நிழல் எம் கண் முன் வந்தாடுதடா - கன்னிப்
பெண்ணை நீ கரம் பிடிப்பாய் என்றிருந்தோம்
காலனவன் காத்திருந்துனைக் க்வர்ந்து சென்றானோ! - எம்
நெஞ்சிருக்கும் வரை உன் நிழலாடும் - நின்
நினைவுதனை நீக்கமற நினைத்திருப்போம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
அன்னாரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கும்
அம்மா, அப்பா, சகோதர சகோதரிகள் உற்றார் உறவினர்கள்
அராலி மேற்கு, வட்டுக்கோட்டை (6485)

உடன்தேவை
மண்டைதீவு சிறுப்புலம் அருள்மிகு சுப்பிரமணிய தேவஸ்தானத்திற்கு நித்திய பூஜை செய்வதற்கு அந்தணர் ஒருவர் உடன் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும் விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:
விளம்பர இல - 340
மே/பா, வலம்புரி
15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம் C5709

THE ROYAL COLLEGE
426(302) K.K.S Rd JAFFNA.
Year 1 to O/L
All Subjects, Good Teachers.
(6491)

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.01.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.